Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 02 | ஞாயிற்றுக்கிழமை 28 நவம்பர் 2021 | கார்த்திகை 12 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 24 | விலை: 40/=

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## மாவீரர் நாள் கடைப்பிடிப்பு மன்., முல்லையில் கைதுகள்

22

## யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் தூபியில் தீபங்கள்

22

## 'பீல்ட் பைக்குறாப்'

22




## முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளர் மீது முள்ளுக்கம்பியால் இராணுவத்தினர் தாக்குதல்

முல்லைத்தீவு, நவ. 28

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவிய லாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் இரா

22

### துப்பாக்கி முனையில் மிரட்டியபோதும்

# மாவீரர் நினைவில் மூழ்கியது தாயகம்

- தமிழீழத் தனியரசுக்காக வித்தானவர்களுக்கு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி
- ஈகச்சுடர்களால் ஒளிவெள்ளத்தில் தமிழர் தேசம்



முல்லைத்தீவு கடற்கரையில் நேற்று மாலை மாவீரர் நாளில் ஏற்றப்பட்ட ஈகச்சுடர். படம் : குமணன்.

யாழ்ப்பாணம், நவம்பர் 28

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப்பேழைகளை – மாவீரர்களை – மனதிலிருத்தி உணர்வுபூர்வமாக தமிழர் தாயக மக்கள் மாவீரர்நாளை நேற்று நினைவுகூர்ந்தனர். பாதுகாப்புத் தரப்பினரின் அழுத்தங்கள், அடாவடிகள், மிரட்டல்கள் எல்லாவற்றையும் கடந்து காவிய நாயகர்களை – வீரமறவர்களை– தமிழர் தேசம் நேற்று அஞ்சலித்தது.

22

## உதயனுக்குள் அத்துமீறி நுழைந்த ஆயுதம் தாங்கிய படையினர்

யாழ்ப்பாணம், நவ. 28

உதயன் பத்திரிகை அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்த ஆயுதம் தாங்கிய

22

# மாவீரரை நினைவேந்தியோரை கூண்டோடு கைதுசெய்வோம்

### கொக்கரிக்கிறது கோத்தாபய அரசு

கொழும்பு, நவ. 28

தமிழர்கள் கூறும் 'மாவீரர்கள்' பயங்கரவாதிகள். நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவர்களை நினைவுகூரவே முடியாது. வடக்கு- கிழக்கில்

22



படம்: வேலணை சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவேந்த முற்பட்டோரை தடுத்த ஆயுதப்படைகள்



## 'கதறியழுத உறவுகள்'

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழத் தனியரசுக்காக விதையாகிப்போன மாவீரர்களை நினைந்துருகி அவர்களின் பெற்றோர், நண்பர்கள், உறவினர்


22



# மாவீரர் நாள் பதிவுகள்












வல்வெட்டித்துறை - தீருவில் வெளியில் இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மாவீரர்நாள் நினைவாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சியின் செயலர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவி திருமதி அனந்தி சசிதரன், தவத்திரு வேலவன் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். மாவீரர் நினைவாக மரக்கன்றும் நடுகை செய்யப்பட்டது. (ஒ-26)







வன்னிவிளாங்குளத்தில் கடைப்பிடிக்கப்பட்ட மாவீரர் நாள்.



முல்லைத்தீவு கடற்கரையில் நேற்று மாலை மாவீரர் நாளுக்கு ஏற்றப்பட்ட ஈகச்சுடர்.



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, நேற்று அஞ்சலி செலுத்தினார். (ஒ)



வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியாவில் மாவீரர் மற்றும் போராளி குடும்பங்கள் கலந்து கொண்ட 2021ம் ஆண்டுக்கான 'தமிழீழ தேசிய மாவீரர் எழுச்சிநாள்' நேற்று உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. கடற்புலி கப்டன் கிருபன், மேஜர் நகுலன் ஆகியோரின் உறவினரும், முன்னாள் போராளியுமாகிய பார்த்தீபன் பொதுச்சுடரை ஏற்றி வைத்தார். (ஒ)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கொழும்பில் அஞ்சலி செலுத்தினார். (ஒ)



பருத்தித்துறை முனைப்பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது. (ஒ-26)



மாமனிதர் நடராஜா ரவிராஜ் இல்லத்தில் நேற்று மாலை 6.07 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றி அஞ்சலி செய்யப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிசோர், சாவகச்சேரி பிரதேசசபையின் உறுப்பினர் சி.சிவநேசன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். ஈகச்சுடரை மூன்று மாவீரர்களின் சகோதரர் சிவஞானம் சிவநேசன் ஏற்றி வைத்தார். இதனையடுத்து இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்களும் வீட்டைச் சுற்றிவளைத்து, வீட்டுக்குள் நுழைந்து, தீபமேற்றி அஞ்சலி செலுத்தியவர்களை அச்சுறுத்தி உயரதிகாரிகள் வரும்வரை தடுத்து வைத்திருந்தனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சென்று தடை செய்யப்பட்ட நினைவுச் சின்னங்களைவைத்து அஞ்சலி செலுத்தினார்களா என்று விசாரணை செய்தபின், அங்கிருந்து சென்றனர். (ஒ-159)



வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையில் மாவீரர் தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. நேற்றுக்காலை சபையின் தலைமைக் காரியாலய முன்றிலில் அகவணக்கத்துடன் நினைவேந்தல் ஆரம்பமாகியது. நினைவேந்தலுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்; ஈகச் சுடரை ஏற்றி அஞ்சலித்தார். (ஒ)



இரட்டைவாய்க்கால் துயிலும் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வு.




யாழ்ப்பாணம் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் "மாவீரர் நாள் நவம்பர் 27" என எழுதப்பட்டுள்ளது. மாவீரர் வாரம் ஆரம்பம் முதல் வடக்கு - கிழக்கில் இராணுவத்தினர் , பொலிஸார், புலனாய்வாளர்கள் ஆகியோரின் சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கைகளும் , கண்காணிப்புக்களும் தீவிரமாக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றைய தினம் அதிகாலைவேளை வீதியில் மாவீரர் நாளை நினைவு கூரும் முகமாக "மாவீரர் நாள் நவம்பர் 27" என எழுதப்பட்டுள்ளது. (ஒ-26)



நாடாளுமன்ற உறுப்பினரும், வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் மாவீரர் நாள் நினைவுகூரலை நேற்று மேற்கொண்டார். (ஒ)



இராணுவத்தினருடைய கெடுபிடிக்கு மத்தியிலும் உயிர்நீத்த உறவுகளுக்கு, முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நந்திக்கடலில் மலர்தூவி நேற்று அஞ்சலி செலுத்தியுள்ளார். (ஒ-246)



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கர் என அழைக்கப்படும் சத்தியநாதனின் வல்வெட்டித்துறையிலுள்ள இல்லத்தில் நேற்று ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவீரர் பண்டிதரின் தாயார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செய்தனர். (ஒ-20)



வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வு.



வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தனது இல்லத்துக்கு முன்பாக தீபம் ஏற்றி மாவீரர்களுக்கு நேற்று அஞ்சலி செலுத்தினார். (ஒ)



டென்மார்க் பல்கலைக்கழக மாணவர்களால் மாவீரர்நாள் கடைப்பிடிக்கப்பட்டது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அவரது அலுவலகத்தில் மாவீரர்களை நேற்று நினைவேந்தினார். (ஒ)



காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளால் வவுனியா மகாஇறம்பைக்குளம் பகுதியில் மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்களும் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆண் வேலையாட்களும் தேவை.

தொடர்பு: 077 419 5015 (CS 41315 )(3/6)

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் வீடொன்றில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப் பெண் தேவை. (CS 684) (3.6)

தொடர்பு: 077 292 8111

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தி அருகாமையில் புன்னாலைக் கட்டுவன் வீதியில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 500 M தூரம்).
ஒரு பரப்பின் விலை 8.5 லட்சம்.

076 8909 259, 077 015 0353 (CS 701) 1-6

**உடனடி வேலைவாய்ப்பு**

- கணினி அறிவுள்ள 35 வயதிற்கு மேற்பட்ட களஞ்சிய இருப்புக்களை சரிபார்ப்பதற்கு (களஞ்சிய காப்பாளர்) வேலையாள் தேவை.
- களஞ்சியத்தில் கணக்குகள் பார்ப்பதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட கணினி அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
- வாகனத்தில் கொண்டு சென்று பொருள்களை இறக்கி காசு சேகரிப்பதற்கு வேலையாள்கள் தேவை.


கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில், ஆவரங்கால், அச்சுவேலி, புத்தூர் பகுதிகளில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 009 0189

# இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, நவ. 28

இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் இன்று திறக்கப்படும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.
இரணைமடுக் குளத்தின் நீரேந்தும் பகுதியில் பெய்த பலத்த மழை மற்றும் கனகராயன் ஆற்றினூடாக வரும் நீர் காரணமாக நீர் மட்டம் வெகுவாக அதிகரித்து வருகின்றது. தொடர்ச்சியான சீரற்ற காலநிலை காரணமாக வெள்ள அனர்த்தம் ஏற்படாத வகையில் வான் கதவுகளை கண்காணிப்பின் அடிப்படையில் படிப்படியாக திறக்க நீர்ப்பாசனத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.



இந்த நிலையில் இன்று வான் கதவுகள் திறக்கப்படும் எனவும், மக்கள் அவதானமாக செயற்படுமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
பன்னங்கண்டி, கண்டாவளை, முரசுமோட்டை, ஊரியான் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதியில் உள்ள மக்கள் அவதானமாகச் செயற்படுமாறும், வாழ்வாதாரங்கள், கால்நடைகளை பாதுகாக்கும் வகையிலும், வெள்ள அனர்த்தத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதேவேளை-வான்பாய்வதை பார்த்தல் மற்றும் தாழ்நிலப் பகுதிகளுக்கு பாதுகாப்பின்றி செல்வதை தவிர்க்குமாறும், மீன்பிடித்தல், நீந்துதல் போன்ற செயற்பாடுகளை தவிர்க்குமாறும் இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.
குறிப்பாக சிறுவர்கள், முதியவர்கள், நோயாளர்கள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

## 12 வயது மாணவி கர்ப்பம்

வவுனியா , நவ. 28
வவுனியா- ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 12 வயதும் 6 மாதங்களுமான மாணவியொருவர் கர்ப்பம் தரித்துள்ள நிலையில், கர்ப்பத்துக்கு காரணமானவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.
மாணவிக்கு வயிற்றுக்குத்து ஏற்பட்ட நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மருத்துவப் பரிசோதனையின்போது மாணவி கர்ப்பம் தரித்த விடயம் தெரிய வந்துள்ளது. அதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.
தன்னை ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியாக மாணவி பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார். சந்தேகநபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-19)

## மின்சாரம் தாக்கி முதியவர் சாவு!

வவுனியா , நவ. 28
நொச்சிமோட்டை, துவரங்குளத்தில் விலங்குகளுக்காக பொருத்தப்பட்ட மின்சார இணைப்பில் சிக்கி முதியவர் ஒருவர் சாவடைந்துள்ளார். துரைச்சாமி சுப்பிரமணியம் (வயது - 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
தனது வீட்டிலிருந்து நேற்றுக்காலை 5 மணியளவில் மரவள்ளிக்கிழங்கு பிடுங்குவதற்காக அருகில் உள்ள தோட்டக்காணிக்குச் சென்றுள்ளார். நீண்டநேரமாகியும் முதியவர் வீட்டுக்கு வராத நிலையில் அவரது மனைவி தேடியுள்ளார். அதன்போதே அவர் தோட்டக்காணியில் சடலமாக கிடந்தமை அவதானிக்கப்பட்டது.
முதியவர் விலங்குகளுக்காக பொருத்தப்பட்டிருந்த மின்சார இணைப்பில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஒ-110)

## மேலும் இரண்டு பேர் பேராசிரியர்களாகினர்

யாழ்ப்பாணம், நவ. 28
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேலும் இரண்டு மூத்த விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகத் தரமுயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.
யாழ். பல்கலைக்கழக பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.
திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவியுயர்வுக்காக விண்ணப்பித்த மூத்த விரிவுரையாளர்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைய மதிப்பீடுகளையும், நேர்முகத்தேர்வு தெரிவுக் குழுவின் பரிந்துரைகளையும் பரிசீலனை செய்த பேரவை மருத்துவப் பீடத்தின் மூத்த விரிவுரையாளரும், நரம்பியல் சிகிச்சை நிபுணருமான மருத்துவக் கலாநிதி அஜினி அரசலிங்கம் மருத்துவப் பேராசிரியராகவும், விஞ்ஞானப்பீடத்தின் விலங்கியல்துறை மூத்த விரிவுரையாளரான கலாநிதி கணபதி கஜபதி விலங்கியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. (ஒ-5)

## இடியுடன்கூடிய மழை பிற்பகலில் தொடரும்!

கொழும்பு, நவ.28
நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
வங்காள விரிகுடாவில் காணப்பட்ட குறைந்த காற்றழுத்த நிலைமை இலங்கையின் கிழக்குப் பகுதியில் தொடர்ந்தும் நீடித்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதனால் பிற்பகல் வேளைகளில் நாட்டின் அநேக பகுதிகளில் இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 22 வயது இளம்பெண் கொரோனாவால் சாவு!

யாழ்ப்பாணம், நவ. 28
தென்மராட்சி பிரதேசத்தில் 22 வயது இளம் பெண் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். சிறுநீரகப்பாதிப்புக்கு உள்ளான நிலையில், கடந்த ஒரு வாரமாக யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். (ஒ-9)

## மணற்காட்டில் ஆணின் சடலம் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், நவ. 28
பருத்தித்துறை, மணற்காடு அந்தோனியார் கோவில் கடற்கரைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது. சடலத்தின் கைப் பகுதியில் காயங்கள் காணப்படுவதாகப் பொலிஸார் கூறுகின்றனர். சடலம் இந்திய மீனவருடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகின்றது. (ஒ-26)

## வல்வெட்டித்துறையிலும் சடலம் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், நவ. 28
வல்வெட்டித்துறை, ஊரிக்காடு இராணுவ முகாம் பின்புறமாக உள்ள கடற்கரையோரமாக நேற்று பி.ப. 3 மணியளவில் உருக்குலைந்த ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. (ஒ-26)

## மன்னாரில் தொடர் மழை பல இடங்களில் வெள்ளம்!



மன்னார், நவ.28
மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் தொடர் மழை காரணமாக மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.
தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு, மன்னார் மற்றும் நகரப் பகுதியில்உள்ள பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.
அதேவேளை, வெள்ள இடர் காரணமாக மக்கள் எவரும் இதுவரை இடம்பெயரவில்லை என்று மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக ஆராயப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட் டார். (எ-56)

## இன்று கூட்டம்

வட்டுக்கோட்டை, நவ. 28
வட்டுமூளாய் வீதி ஐக்கிய நாணய சங்க பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தலைவர் அ.றமேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எறிகணைகளாகும் எரிவாயு சிலிண்டர்கள்

பொருளாதார நெருக்கடி, பொருள்களுக்குத் தட்டுப்பாடு என்று தவித்துக் கொண்டிருக்கும் இலங்கையர்களுக்கு இப்போது மரண பீதியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன சமையல் எரிவாயு சிலிண்டர்கள். நாட்டின் பல பகுதிகளில் அடுத்தடுத்து நடக்கும் எரிவாயு சிலிண்டர் வெடிப்புக்களால் நிம்மதியைத் தொலைத்திருக்கின்றனர் மக்கள்.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பில் ஒரு பாரதூரக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார். நாட்டில் எரிவாயு வர்த்தகத்தில் ஈடுபடும் இரண்டு பிரதான நிறுவனங்களும் இணைந்து இந்த இரசாயன மாற்றத்தை செய்துள்ளன என்பதும், அதுவே எரிவாயு சிலிண்டர் வெடிப்புக்குக் காரணம் என்பதும் அவரது குற்றச்சாட்டு.

வழமைக்கு மாறான இந்த அசாதாரண வெடிப்புக்கள் அவரது கூற்று உண்மையாக இருக்கலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால், அவரது குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் மறுக்காத அரசு, வழக்கம் போன்று ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கின்றது. வெடிப்புக்களுக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கும் சம்பந்தமில்லை என்று அரசும், அரசு சார்ந்தோரும் கூறிக்கொண்டிருந்தாலும் இந்த மாதத்தில் மட்டும் ஆறு வெடிப்புச் சம்பவங்கள் நாட்டில் நடந்துவிட்டன. அந்த வெடிப்புச் சம்பவங்களில் சிக்கி ஒரு யுவதியின் உயிரும் பறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரம் நாடாளுமன்றத்திலும் எதிரொலித்த போது, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். சுதந்திரத்தின் பின்னர் நாட்டில் எந்த அரசும் எரிவாயுவின் தரத்தைப் பரிசோதிக்கும் பரிசோதனை நிலையங்களை அமைக்கவில்லை என்றும், இந்தப் பிரச்சினைக்கு அனைத்து அரசுகளும் பொறுப்பேற்கவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். எனினும் எந்த அடிப்படையில் அரசு, நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளரின் குற்றச்சாட்டை மறுக்கின்றது என்பது புரியாத புதிரே.

அரசு கூறுவது உண்மையாக இருந்தாலும்கூட, எப்போதும் இல்லாதவகையில் தொடர்ச்சியாக எரிவாயு சிலிண்டர்களால் வெடிப்புச் சம்பவங்கள் நடப்பதற்கான காரணத்தையாவது கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். ஆனால், அதற்குக்கூட அரசு தயாராக இல்லைப் போன்றே தெரிகின்றது. இந்த வெடிப்புச் சம்பவங்களுக்கு மக்களின் அஜாக்கிரதையே காரணம் என்று பொதுமக்களின் தலையில் பழியைக் கட்டிவிட்டுத் தப்பித்துக்கொள்ள அரசு முயல்கின்றது.

எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பாக நாட்டு மக்களுக்கு சந்தேகங்கள் எழுமாயின் அவற்றைத் தீர்க்க வேண்டியது அரசின் கடமை. அந்தக் கடமையை அரசு ஒருபோதும் தட்டிக்கழித்துவிட முடியாது. நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் மக்களின் தலையில்கட்டி தப்பித்துக்கொள்ளும் தந்திரோபாயத்தை அரசு இந்த விடயத்திலும் காண்பிக்கக்கூடாது. உரிய விசாரணைகளைநடத்தி, உரிய ஆய்வுகளை மேற்கொண்டு மக்களின் சந்தேகங்களைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாது வார்த்தை ஜாலங்களால் காலத்தைக்கடத்தி அசம்பாவிதங்கள் ஏற்படுமானால் அதன் பொறுப்பை அரசே ஏற்கவேண்டும்.




### ஈஸ்டர் தினத் தாக்குதல்

# தகவல்கள் வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கவில்லை

*அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சாட்சியம்*

**கொழும்பு, நவ. 27**

**பயங்கரவாதத் தாக்குதல் நடைபெற வாய்ப்புள்ளது என்று கிடைத்த தகவலை பாதுகாப்புச் செயலர் மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் கையளித்தேன். அதனால் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமைக்கான பொறுப்பை ஏற்க முடியாது.**

இவ்வாறு அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவரும், மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நிலந்த ஜயவர்த்தன உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21ஆம் திகதி காலை தாக்குதல் நடக்கலாம் என நம்பக்கூடிய புலனாய்வுத் தகவல் ஏப்ரல் 4ஆம் திகதி கிடைத்தது. அந்தத் தகவல் மூலத்திலிருந்து 20ஆம் திகதியும் தகவல் கிடைத்தது. அதை உரிய தரப்பினருக்கு அறிவித்துவிட்டேன். அது மட்டுமின்றி 21ஆம் திகதி காலை தாக்குதல் நடக்கலாம் என்று சில மணி நேரத்துக்கு முன்பாகக் கிடைத்த தகவல்களையும் உரிய தரப்பினருக்குச் சேர்ப்பித்தேன். அதனால் தாக்குதலைத் தடுக்கத் தவறிய பொறுப்பை ஏற்க முடியாது.

நாட்டில் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது, நாட்டை முடக்குவது அல்லது அதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காதது எனது பலவீனம் அல்ல. எனக்குக் கிடைத்த உளவுத் தகவல் பாதுகாப்புச் செயலாளருக்கு நேரடியாகச் சென்றது. ஒரு நபருக்கு புலனாய்வு சேவைகள் வழங்கும் புலனாய்வு அறிக்கைகளைச் சரியாக புரிந்துகொள்ள இயலாமை என்பது அவர்களின் அனுபவம் சார்ந்த விடயம். அது என் தவறல்ல.

* * *

அரச உளவுப்பிரிவு என்ற வகையில் நாங்கள் உளவுத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். நாங்கள் வழங்கும் உளவுத் தகவல்களின் அடிப்படையில் செயற்படுவது எங்கள் பொறுப்புஅல்ல. அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து ஒடுக்குவது பொலிஸார் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவுகளே - என்றார். (எ-இ)

# தென்மராட்சியில் நாளை முதல் 'பூஸ்டர்'

தென்மராட்சிப் பிரதேசத்தில் சினோபார்ம் இரு டோஸ்களையும் ஏற்றியவர்களுக்கு, பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நாளை ஆரம்பமாகும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

நாளை கொடிகாமம் மருத்துவமனையிலும், நாளைமறுதினம் கைதடி மருத்துவமனையிலும், டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வரணி மருத்துவமனையிலும், 3ஆம் திகதி சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும், 4ஆம் திகதி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலும் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும் இரு சினோபார்ம் தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்டவர்கள் அதற்குரிய அட்டையுடன் சென்று தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

நவம்பர் 2021 **வடமாகாண மரநடுகை மாதம்**

"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்!." –

**ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)**



# பனை அபிவிருத்திச் சபை கொழும்புக்கு செல்லாது

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ.28**

**யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் எந்தக் காரணத்துக்காகவும் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட மாட்டாது என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், "யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையை கொழும்பு நோக்கிக் கொண்டுசெல்வதற்கான முயற்சி இடம்பெறுகின்றது. அந்தச் சபையின் தலைவராக சிங்கள சகோதரர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பனை என்பது தமிழர்களின் பாரம்பரியத் தொழிலை அடிப்படையாகக் கொண்டது. எனவே, தயவுசெய்து அதனை தமிழர்களிடம் விட்டு விடுங்கள். கணக்காளர்கள், உத்தியோகத்தர்கள் என சிங்கள நியமனங்கள் இடம்பெறுகின்றன." என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண, "பனை அபிவிருத்திச் சபை ஊடாக ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டால் அது தொடர்பில் எம்மிடம் முறையிடுங்கள். மக்களுக்குச் சேவை செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. தலைமையகத்தை கொழும்புக்குக் கொண்டுசெல்ல மாட்டோம். யாழ்ப்பாணத்தில் - தான் அது இயங்கும்" - என்றார். (எ-44)

## நாவலர் குருபூசை தினம்



வவுனியா, நவ.28

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வை இந்து சமய காலாசார அலுவல்கள் திணைக்களமும் வவுனியா குட்செட் வீதி ஸ்ரீ கருமாரியம்மன் தேவஸ்தானமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

ஸ்ரீ கருமாரியம்மன் தேவஸ்தான மண்டபத்தில் நேற்றுக்காலை ஸ்ரீ கருமாரியம்மன் தேவஸ்தான பிரதம குரு நா.பிரபாகரக்குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, நடனம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆலய குருக்கள், சமய ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-18)

★★★



மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் ஆறுமுக நாவலர் குருபூசை தின நிகழ்வுகள் நேற்றுக் காலை திருக்கேதீஸ்வர சிவன் அருள் இல்லத்தில், இல்லத்தின் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

ஆறுமுகநாவலர் திருவுருவப் படத்துக்கு சிறப்புப் பூசைகள் நடைபெற்றன. நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் மாணவ, மாணவியரின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (எ-213)

★★★

கிளிநொச்சி மாவட்டச் செயலக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சாந்தபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஆறுமுக நாவலர் குருபூசை தின நிகழ்வுகள் நடைபெற்றன.

நாவலரின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து, வழிபாடுகள் நடைபெற்றன. சாந்தபுரம் முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, பண்ணிசை, தேவாரம் என்பன இடம்பெற்றன. நிகழ்வில் மாவட்ட இந்து சமய கலாசார உத்தியோகத்தர்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆலய நிர்வாகத்தினர், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-113)

# குருபூசை நிகழ்வுகளையும் சந்தேகித்த படைத் தரப்பு!

வவுனியா, நவ.28

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசை தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சீருடைத் தரப்பினர் செயற்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

நாடு முழுவதும் நேற்று இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசைத் தின நிகழ்வுகள் பல்வேறு இடங்களில் நடைபெற்றன. வவுனியா குட்செட் வீதி, கருமாரி அம்மன் தேவஸ்தானத்திலும் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வு நடைபெற்றபோது ஆலயத்தின் வெளிப்புறம் பெரும் எண்ணிக்கையான புலனாய்வுப் பிரிவினர் காணப்பட்டனர் என்றும்-பொலிஸார் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்றும் - பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

அத்துடன் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் ஆலயத்துக்குள் வந்து நிகழ்வுகளை ஒளிப்படம் எடுத்துச் சென்றார் என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

தமிழ் மக்களால் வருடாந்தம் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படும் நிலையில், அதற்கு முட்டுக்கட்டை போடும் செயற்பாடுகளில் இலங்கைப் படைத்தரப்பு மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இந்த ஆண்டும், நீதிமன்றங்கள் ஊடாக நினைவேந்தலுக்குத் தடைகளை ஏற்படுத்த படைத்தரப்பு முயன்றிருந்தது. (எ-110)

## விதையாகியோர் நினைவாக மரக்கன்றுகள் பகிர்ந்தளிப்பு

கிளிநொச்சி, நவ. 28

"மனங்கள் ஆற மரம் ஒன்று நடுவோம்" எனும் செயற்றிட்டத்துக்கு அமைவாக, தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

"விதையாகி எங்கள் விளைவாகி நாளை நட்டவை மலர்ந்து நம் நிலம் மலரட்டும்" எனும் தொனிப்பொருளில் குறித்த செயற்றிட்டம் கரைச்சி பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில், பிரதேசசபை வளாகத்தில் நிகழ்வு இடம்பெற்றது. 21 வட்டாரங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட மரக்கன்றுகள், குறித்தொதுக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்குச்சென்று வழங்கப்பட்டன. கரைச்சி பிரதேசசபையின் உபதவிசாளர் தவபாலன் மற்றும் பிரதேசசபையின் உறுப்பினர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் அவற்றை வழங்கினர். (ஒ-4-6)

## ஆய்வரங்கம்

"சைவசமய வாழ்வியல் முறைமைகளில் இயற்கை மேலாண்மை" என்னும் ஆய்வரங்கம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம், காவேரி கலாமன்றம், யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரி, தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து நடத்தும் இந்த ஆய்வரங்கு, பேராசிரியர் முனைவர் சண்முகதாஸ் மனோன்மணி தலைமையில் ஆரம்பமாகும். மேலும், ஆய்வரங்கில் சிறப்பு விருந்தினர்களாக சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் உள்ளிட்டவர்கள் பங்கேற்கவுள்ளனர். (ம-ரி-9)

# பால்நிலை வன்முறைக்கு எதிராக விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,நவ.28

பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்றிட்டம், சமூக செயற்பாட்டு மையத்தால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் பால்நிலை வன்முறைக்கு எதிராக விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்துவரும் இந்த நிறுவனம், தொடர் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.

உலகளாவியரீதியில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



அதன் ஆரம்பமாக, யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் விழிப்புணர்வுப் பதாகை கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக செயலர் ம.பிரதீபன் மாவட்டச் செயலக மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் லேனுகாராணி, யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிர்தராஜ், யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி சிவானந்தன் சற்குணராஜா மற்றும் யாழ்.சமூக செயற்பாட்டு மைய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4-27)




# இதயவாரிதிக்குள் உறவாகினான் உதயன்



**கலாபூஷணம்**
**கே.எஸ்.சிவஞானராஜா**

மூத்தவன் என்ற இறுமாப்போடு முப்பத்தேழாவது அகவையில் இன்று பூத்திருக்கின்றாய். காத்திரமாய்ச் செய்திகளை நேர்த்தியாக்கித் தருவதில் பாத்திரமாய்த் திகழ்கின்றாய். பலே!

இடரினும் தளரினும் உடலுறு நோய் தொடரினும் இதயவாரிதிக்குள் நீயோ உறவாகி எமக்கு வரமாகின்றாய். வாரமாகின்றாய். வாசிக்க வாசிக்க வசீகரிக்கின்றாய்.

ஊடக தர்மத்தைப் பேணுவதில் ஏனையோருக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றாய். யார் யாருக்கு எவரெவரை எங்கெங்கு வைக்க வேண்டுமோ அவரவரை அங்கங்கு நிறுத்துப்பார்த்து நிதானமாக வைக்கிறாய். அடக்கி வாசிக்க வேண்டியவற்றை அடக்கியும் உரத்துச்சொல்ல வேண்டியவற்றை உரத்தும் உறைக்கவும் சொல்கிறாய்.

ஒரு சின்ன விடயத்தைப் பெருந்தடல்புடலாக்காமலும் ஒரு பெரிய விடயத்தைச் சின்னஞ் சிறிய தாக்காமலும் சீராக வடிவமைக்கிறாய்.

ஏற்கனவே வந்துவிட்ட பழைய ஒரு செய்தியை மற்றொருவர் அதனைப் புதுப்பித்து ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிட்டால்கூட அது பிசுபிசுக்கும் என்பதையுணர்ந்து அதனை அடக்கமாகப் பிரசுரிக்கும் பத்திரிகாதர்மத்தையும் உதயன் கவனமாக்கியுள்ளான்.

மேலும் முதல் பக்கத்தில் என்ன செய்தி எப்படி வரவேண்டும் என்பதை எல்லாம் உதயன் முற்கூட்டியே தீர்மானிக்கின்றான்.

அண்மையில் ஒரு செய்தி ஊடகங்களில் பல வடிவமைப்பில் வெளிவந்தது பற்றி இங்கு சுட்டிக்காட்டியே ஆக வேண்டும். ஓர் ஊடகம் முற்பக்கத்தில் அந்தச் செய்தியைக் கொட்டை எழுத்தில் போட்டு கொடியேற்றியது மட்டுமல்ல சமூகத்தைக் கிளறியும் குழப்பியும் கொண்டது. இன்னுமொரு ஊடகமோ அச்செய்திக்கு வாய்ப்பே அளிக்கவில்லை. வேறொரு ஊடகமோ அதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. உதயனோ அச் செய்தியைப் பரபரப்பாக்காமல் பவ்வியமாக உட்பக்கத்தில் பிரசுரித்து சக வாழ்வுக்குச் சாத்தியமளித்தது.

மேலும் ஆசிரிய தலையங்கம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பதக்கம் சூட்டமுடியும். ஆன்மீகம் அரசியல், அழகு, தமிழ், பண்பாடு, கலை கலாசாரம், உலக அரங்கம், நிதி, நீதி, நிர்வாகம் ஊழல் தொடர்பாக எழுதப்படுபவையாவும் அற்புதமானவையாகும். உதயனை எவருமே சீண்டிவிட முடியாது. சீண்டினால் உதயன் தக்க பதில் கொடுத்து நீதியை நிலைநிறுத்தியே தீருவான். வெல்க உதயனின் தர்மம்.

## கானமயில் ஐயாவின் கனவுகள் நனவாக.....!

சமூக ஊனங்கள்
சுமூகமாய் மறையவென
பேனாக் கலப்பையினால்
மனத்தரிசை உழுதவரே!

அச்சுறுத்தல் பலவற்றை
அனுதினமும் எதிர்கொண்டும்
அச்சமின்றி அறங்காக்க
உச்சப்பணி செய்தவரே!

பொறியியல் படிப்பதெனும்
அறிவியல் ஆர்வத்தினை
பாதிவழி நிறுத்திவிட்டு
பத்திரிகை தந்தவரே!

பத்திரிகைத்துறை வந்த
பலரையும் பட்டை தீட்டி
ஆசிரிய தலையங்கம்
அற்புதமாய் வடித்தீரே!

கானமயில் ஐயா உம்
கனத்த பணி ஓய்ந்தாலும்
இனத்தீபமாய் என்றும்
இதயத்தில் சுடர்வீரே!

**இரா.ஜெயக்குமார்**

## கலங்கரை விளக்கானவன்!

ஈழத்தமிழ் பத்திரிகை வரலாற்றில் தனக்கென தன்னிகரற்ற தனியான இடத்தைப் பிடித்துள்ள 'உதயன்' தனது 37ஆவது வயதில் காலடிபதிக்கிறான்.

மிகவும் மகிழ்ச்சியான செய்தி இது.

எமது மண்ணோடும் மக்களோடும் பல வகையில் பின்னிப் பிணைந்துவிட்ட ஒரு நிறுவனம் என்ற வகையில் எமக்கும் உதயன் நிறுவனத்துக்கும் மிக நெருங்கிய உறவு உண்டு.

பல இக்கட்டான தருணங்களில் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம்கொடுத்து எமது சமூகத்துக்கு கலங்கரை விளக்காக, சிறந்த வழிகாட்டியாக இன்றுவரை வீறுநடை போடுகின்ற உதயன் 37ஆவது அகவையில் கால் பதிப்பதையிட்டுப் பெருமகிழ்வடைகிறோம்.

உலகத்தை இயக்குகின்ற மகா சக்தி படைத்த உதய சூரியனைப்போல எமது மக்களையும் நன்நெறிப்படுத்தும் உதயனுக்கு எமது நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமை கொள்கிறோம்.

அதிபர்
அண்ணா தொழிற்சாலை,
இணுவில்.

# தமிழர் நெஞ்சத்தில் நிறைந்தவன் உதயன்

அகவை முப்பத்தேழில் பதம்பதிக்கும் உதயன்
அகவை பலநூறு கண்டினிதே வாழ்க

நாள்தோறும் காலையிலே எம் கண்கள் உதயன் முகம்
பார்த்தபின்பே மலருமென்பதுவே உண்மை

எம்முகம் மலர்வதற்கு உதயனே உன் நல்வரவை
காத்திருக்கும் எம்முகத்தைப் பார்

இடர்கள் பல கண்டும் இன்னல் பல வென்றும்
துணிவுடனுன் பணி தொடரும் உதயனே வாழ்க

எரிப்பது முதலாக ஏதேதோ செய்தவரின்னும்
எதற்குமஞ்சாதுன் பணிதொடரவென் வாழ்த்து

உண்மைகளை உண்மையாகத் துணிவுடனே எடுத்துரைக்கும்
உதயனேயுன் துணிவுக்கெந்தனது வாழ்த்து

தமிழினத்தின் நலமொன்றே உன் பலமாய்க் கொண்டொளிரும்
உதயனே தமிழ்போல் நீயென்றும் வாழ்க

தமிழுரிமைப் போரினிலே தமிழர்நலம் காத்துநின்று
தளராது உழைக்குமெம் உதயனே நீ வாழ்க

எம்தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையை என்றென்றும்
வேண்டிநிற்கும் உதயனே நீ வாழ்க!

கொரோனாவுக் எதிராகச் சுகாதாரத் துறையினரின்
திட்டங்களை ஊக்கிநிற்கும் உதயனே நீ வாழ்க

எச்சமயச் செய்தியையும் அதன்புனிதம் கெடாவண்ணம்
எமக்களிக்கும் உதயனே நீ வாழ்க

சமூகத்தில் நாளாந்தம் இடம்பெறும் சூச்சல் குழப்பங்களைக்
கண்டித்துச் செய்திதரும் உதயனே நீ வாழ்க

துடுப்பாட்டச் செய்திகளை விரிவாகவும் விரைவாகவும்
எமக்களிக்கும் உதயனே நீ வாழ்க

ஒலிம்பிக் போட்டி மற்றும் விளையாட்டுச் செய்திகளை
விரைந்தளிக்கும் உதயனுக்கெந்தன் வாழ்த்து

விளையாட்டுத் துறையினிலெம் மாணவர்கள் நிகழ்த்துகின்ற
சாதனைகளைப் போற்றும் உதயனே வாழ்க

விளையாட்டுச் செய்திகளை விளையாட்டாய் தந்தென்றும்
விளையாட்டை ஊக்குவிக்கும் எம்முதயன் வாழ்க

மாணவர்க்குதவும் வண்ணம் மாதிரி வினாத்தாள் விடைகள்
கிரமமாய்ப் பிரசுரிக்கும் உதயனே நீ வாழ்க

உதயனேயுன் பணிகள் கண்டு எம்முள்ளம் மகிழுதப்பா
உதயனேயுன் பணி தொடர எம் வாழ்த்து

உதயனே உன் நற்பணிகள் தொடர்ந்தென்றும் வளர்ந்திடவே
இறையருளை வேண்டுகின்றோம் நித்தம்

**முருகு**

# ஆண்டுகள் 10 ஆன பின்பும் ஆறவில்லை உங்கள் நினைவு



மண்ணோடு 16.12.1959 விண்ணோடு 28.11.2011

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமகவும் கொண்ட

## அமரர் திவாகரன் சுப்பிரமணியம்

எம்மை பெற்று வளர்த்து பேணிக்காத்து
அன்பும் அறிவும் ஊட்டி வளர்த்து
தரணியிலே வாழ வைத்த - எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து பத்து
ஆண்டுகள் ஆனபோதும் எம் நெஞ்சத்தில்
உங்கள் நினைவுகள் என்றும் - பசுமையாய்
நித்தம் உங்களை அழைக்கின்றோம்
பத்து ஆண்டுகள் என்ன நூறாண்டுகள்
உங்கள் கள்ளமில்லா சிரிப்பும் நேசமும்
மறைந்து போகுமா? - எம்மை விட்டு

(CS 41303) (3.6)

27, ஜெயா வீதி,
கொழும்பு - 04

என்றும் உங்கள் நினைவுடன் நாம்
மனைவி, பிள்ளைகள் (லண்டன்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 08 . 01 . 1943



மறைவு 02 . 11 . 2021

கடந்த 02.11.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் சண்முகம் கேதாரலிங்கம்

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் நாளை மறுதினம் (30.11.2021) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் (02.12.2021) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி , கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் மற்றும் மலர் வளையம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் .

இல , 79, 7 ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம்,
வவுனியா

குடும்பத்தினர்
024 222 6887

(cs60926) (2.6)

# உங்கள் நினைவுகளும் தியாகங்களும் எங்களை பதைபதைக்க வைக்கின்றன

**யாழ்ப்பாணம், நவ. 28**

**மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று அவர்களை அஞ்சலிக்கும் வாய்ப்புக்கள் எமக்கு மறுக்கப்பட்டிருப்பினும், எமது மனங்களிலே தீபமேற்றி அவர்களை நாம் நினைவுகூருகிறோம். வாழ்ந்து-சுகபோகங்களை அனுபவிக்கவேண்டிய இள வயதில், மண்ணையும் - மக்களையும் நேசித்து, நாம் வாழ, தம் உயிர் ஈய்ந்த மாவீரச்செல்வங்கள் அவர்கள் - இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சசிகலா ரவிராஜ்.**

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது: அரசியல் வழியிலும் அகிம்சை வழியிலும் போராட்டங்களை முன்னெடுத்த அரசியல் தலைவர்களின் முயற்சி பயனளிக்காததால் ஏமாற்றமடைந்த அவர்கள், தாம் விரும்பாத ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அது அவர்கள் மீது திணிக்கப்பட்ட போர். எமது இனத்தின் இருப்பை உறுதி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டதேயன்றி, அவர்கள் ஆயுதத்தின்மீது ஆசை கொண்ட ஆயுததாரிகள் அல்ல.

மாவீரர்களே! உங்கள் நினைவுகளைச் சுமந்து செல்கிறோம். எங்கள் ஒவ்வொருவரின் இதயத்திலும் ஆன்மாவிலும், உங்களை நினைந்து பூசிக்கிறோம். நினைவுகளைத் தடைசெய்யும் வல்லமை இவ்வுலகில் யாருக்கும் இல்லையல்லவா?

மரண தேவனுக்கு அஞ்சி நடுங்குவதும் மறைந்தோடுவதுமே மாந்தரின் வழமை, ஆனால், மரணத்தை துச்சமாக மதித்து, களமாடிய உங்கள் நினைவுகளும் தியாகங்களும் எங்களை பதைபதைக்கவும் - திகைக்கவும் வைக்கின்றன!.

மாவீரன் அலெக்ஸாண்டர், மாவீரன் நெப்போலியன் என்று சரித்திரம் குறிப்பிடும் வரிசையில் உங்களையும் வைத்துவிட எம்மனம் ஒப்புதல் வழங்க மறுக்கிறது. உங்கள்களம், உங்கள் உளம் அனைத்தும் மாறுபட்டவை.

மாவீரர்கள் என்ற சொல் அவர்களையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படுவதால் அச்சொல்லிலும் மேலான சொல் ஒன்றைத் தேடுகிறோம். சுயநலம் தவிர்த்து பயமின்றிக் களம்புகுந்து போராடி வீரமரணமெய்திய எம் சகோதரர்களே ,புதல்வர்களே உங்களைப் போற்றி அஞ்சலிக்கின்றோம் - என்று குறிப்பிட்டார். (ம)

# திருமறைக்கலாமன்ற ஆய்வரங்கம் இன்று!

யாழ்ப்பாணம், நவ. 28

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக ‘கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை’ என்னும் தலைப்பில் சூம் செயலி ஊடாக திருமறைக் கலாமன்றம் மாதம் தோறும் நடத்திவருகின்ற ஆய்வரங்கத்தொடரின் ஆறாவது நிகழ்வு இன்று மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் “மரிய சேவியர் அடிகளாரின் மறைபொருள் நாடகங்கள்” என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி மேரிவினிபிரிடா சுரேந்திரராஜ் ஆய்வுரை வழங்க வுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809 கடவுச் சொல் cpa என்பதனூடாக நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும். (ம)

# இணைய வழி அரங்க கதையாடல்

யாழ்ப்பாணம், நவ. 28

மெய்நிகர் இணையவழி அரங்க கதையாடலின் 52 ஆவது நிகழ்வு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், யாழ். மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய நாடகத்துறை ஆசிரியர் க.கஜேந்திரன், “ஈழத்து இசை நாடக ஆளுமைகளில் சரவணமுத்து” என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார்.

ஆர்வமுடையவர்கள், 6473 348261 என்ற சூம் செயலி இலக்கம், ITM என்ற கடவுச்சொல் ஊடாக இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-ரி-1)

# இ.போ.சவின் நாளாந்த வருமானம் அதிகரிப்பு

கொழும்பு,நவ.28

இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் 60 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்கு முன்னர் சராசரி - தினசரி வருமானம் 80 தொடக்கம் 85 மில்லியன் ரூபாவுக்கு இடைப்பட்டதாகக் காணப்பட்டது. எனினும் கொரோனாத் தொற்றுக் காலத்தில் 6 தொடக்கம் 7 மில்லியன்ரூபா வருமானமே ஈட்டப்பட்டது.

தற்போது பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதை அடுத்து, இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)


பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்திடினும்
கட்டி இழுத்து கால்,கை முறித்து
அங்கம் பிளந்து இழந்து துடிதுடினும்,
பொங்கு தமிழை பேச மறப்பேனோ...
மகாகவி பாரதியார்.

Registered as a Newspaper
பக்கங்கள்: 08
# சஞ்சீவி
மலை : 33
சிகரம் : 75
ஞாயிற்றுக்கிழமை (28.11.2021)
கார்த்திகை 12
வள்ளுவர் ஆண்டு : 2053

# வெளியுறவுக்கொள்கை இல்லாத ஈழத்தமிழர்கள் ?



○ நிலாந்தன்




ஐந்து தமிழ்க்கட்சிகள் இணைந்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற ஒரு கூட்டுக் கோரிக்கையை இந்தியாவை நோக்கி முன்வைக்க முயற்சிக்கின்றன. இம்முயற்சியில் முஸ்லிம் கொங்கிரஸையும் மனோ கணேசனின் கட்சியையும் ஒருங்கிணைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள மிகப் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சியை ஒருங்கிணைக்க முடியவில்லை. இது ஒரு ஓட்டம்.

அதேசமயம் சுமந்திரன் தலைமையிலான ஒரு சட்டவாளர் குழு அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று அவர்கள் சென்றதாக சம்பந்தரும் சுமந்திரனும் கூறுகிறார்கள். ஆனால் அந்தக்குழுவில் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல அப்படி ஒரு குழு போகவிருப்பதுபற்றி தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு தெரியாது. எனவே அந்தக்குழுவை கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ குழுவென்றோ அல்லது தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ குழுவென்றோ கூறுவது பொருத்தமாக இருக்காது. இது இன்னொரு ஓட்டம்.

இந்த இரு ஓட்டங்களுக்குள்ளும் இணையாது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனித்து நிற்கிறது. ஆனால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பூகோள மற்றும் புவிசார் அரசியலைக் கையாள வேண்டும் என்று அதிகமாகப் பேசியது அந்தக்கட்சிதான்.

இவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் வெளியுறவு அணுகுமுறை தொடர்பில் மூன்று ஓட்டங்கள் காணப்படுகின்றன.

இந்தியா தமிழ்க்கட்சிகளிடமிருந்து ஒரு கூட்டுக் கோரிக்கை வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறது என்று சொன்னால் அதன் பொருள் இந்தியா இனப்பிரச்சினையில் ஏதோ ஒரு விதத்தில் தலையிட முனைகிறது என்பதுதான். இந்திய அமைதிகாக்கும் படையினரை பிரேமதாஸவும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இணைந்து வெளியேறுமாறு கேட்டார்கள். எந்த இரண்டு தரப்புக்களுக்கு இடையில் சமாதானம் செய்வதற்காக அமைதிகாக்கும் படை இலங்கைக்குள் இறங்கியதோ அதே இரண்டு தரப்புக்களும் அந்தப்படையை வெளியேறுமாறு கேட்டபோது அமைதிப்படைக்குரிய மக்கள் ஆணை காலாவதி ஆகியது. இவ்வாறான ஒரு பின்னணியில் கொழும்புடன் இணைந்து தன்னை வெளியே போகுமாறு கேட்ட தமிழ்மக்கள் மத்தியில் இருந்து தன்னை திரும்பவும் தலையிடுமாறு கேட்கும் ஒரு கூட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றதா?


அதேசமயம், அமெரிக்கா தமிழ்ப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுகிறது என்றால் அதன் பொருள் இனப்பிரச்சினையை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்தி கொழும்பின் மீதான தனது பிடியை பலப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது என்பதுதான்.

எனவே தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. பிராந்தியப் பேரரசும் உலகப் பேரரசும் கொழும்பின் மீது அழுத்தத்தை பிரயோகிப்பதற்கு தமிழ்த்தரப்பை கையாள வேண்டிய தேவை அதிகரித்து வருகிறது. இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் தமிழ்த்தரப்பு என்ன செய்ய வேண்டும்? எவ்வளவுக்கு எவ்வளவு வெளித்தரப்புக்களின் அழுத்தத்தை கொழும்பின் மீது பிரயோகிக்க வைக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ்மக்கள் பெறக்கூடிய தீர்வின் பருமனும் அதிகரிக்கும்.

மூன்றாவது தரப்பு ஒன்றின் நிர்ப்பந்தம் இன்றி சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் தீர்வுக்கு உடன்படாது. 2016 இல் மன்னாரில் “தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம்?” என்ற கருத்தரங்கில் இந்தக்கருத்தை நான் வலியுறுத்திப் பேசிய பொழுது சம்பந்தர் கூறினார் “அது ஒரு வறண்டவாதம் வரட்டுவாதம்” என்று. ஆனால் இனப்பிரச்சினையின் பல தசாப்தகால அனுபவத்தை தொகுத்துப் பார்த்தால் எது சரி என்பது மிகத் தெளிவாக தெரியும். இது கடந்த பல தசாப்த கால இலங்கைத்தீவின் வரலாற்றில் நிரூபிக்கப்பட்ட ஒரு பேருண்மை.

இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை தொடர்பில் இதுவரை எழுதப்பட்ட எல்லா உடன்படிக்கைகளிலும் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் நீடித்தவை மூன்று உடன்படிக்கைகள். முதலாவது இந்திய-இலங்கை உடன்படிக்கை. இரண்டாவது ரணில் பிரபாகரன் உடன்படிக்கை. மூன்றாவது நிலைமாறு கால நீதிக்கான ஐநா தீர்மானம்.

இம்மூன்று உடன்படிக்கைகளின் போதும் மூன்றாவதுதரப்பின் பிரசன்னம் இருந்தது. இந்திய - இலங்கை உடன்படிக்கையை அமுல்படுத்த இந்திய அமைதி காக்கும் படை இறங்கியது.





ரணில்- பிரபாகரன் உடன்படிக்கையின் போது ஸ்கண்டிநேவிய யுத்தநிறுத்த கண்காணிப்பாளர்கள் இறங்கினார்கள். ஐ.நா. தீர்மானத்தின் பின் இலங்கைத் தீவை கருக்குழு நாடுகளும் ஐ.நா. வின் சிறப்புத் தூதுவர்களும் தொடர்ச்சியாகப் பின் தொடர்ந்தார்கள். எனவே ஒரு மூன்றாவது தரப்பின் பிரசன்னம் இன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடையாது. இப்பொழுது கேள்வி யார் அந்த மூன்றாவது தரப்பு ? என்பதுதான். மேற்கண்ட மூன்று தீர்வு முயற்சிகளின் போதும் இரண்டு தரப்புகள் மத்தியஸ்தம் வகித்தன. இந்திய- இலங்கை உடன்படிக்கையில் இந்தியா. பின் வந்த இரண்டு ஏற்பாடுகளிலும் மேற்கு நாடுகள். 2000 ஆண்டு விடுதலைப் புலிகளின் காலத்திலிருந்து தொடங்கி இன்றுவரையிலுமான கடந்த 21ஆண்டுகளில் மேற்கு நாடுகளே ஒன்றில் அனுசரணை புரிகின்றன அல்லது மத்தியஸ்தம் வகிக்கின்றன. இதில் முதலாவது கட்டம் 2009 வரையிலுமானது. மேற்கு நாடுகள் மற்றும் ஜப்பானின் பின்பலத்தோடு முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளின் போது நோர்வே சமாதானத்துக்கான அனுசரணையாளராகச் செயற்பட்டது. அந்நாட்டின் விசேஷ தூதுவரான சொல்ஹெய்ம் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான எல்லா விடயங்களையும் இந்தியாவுக்கு தொடர்ச்சியாக ’அப்டேட்’ செய்து வந்தார். இது முதலாம் கட்டம்.

இரண்டாம் கட்டம் 2009 க்குப் பின்னரான ஜெனிவா மைய அரசியல். அதன் ஒரு கட்ட விளைவே 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம். அது இலங்கைத்தீவுக்கு நிலைமாறு கால நீதியை பரிந்துரைக்கின்றது. அதேசமயம் ஐ.நா. தீர்மானங்களில் 13 ஆவது திருத்தம் ஒரு தீர்வாக முன்வைக்கப்படுகிறது. அதாவது ஐ.நா. மைய சமாதான முயற்சிகளிலும் இந்தியாவின் 13 ஆவது திருத்தம் ஒரு பேசுபொருளாக இருக்கிறது என்று பொருள்.

எனவே 2000 ஆண்டிலிருந்து தொடங்கி மேற்கு மைய சமாதான முயற்சிகள் எல்லாவற்றிலும் இந்தியா நேரடியாகவோ மறைமுகமாகவோ செல்வாக்குச் செலுத்தி வருகிகிறது. அதுதான் இலங்கை இனப்பிரச்சினையின் புவிசார் அரசியல் யதார்த்தமாகும். இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச் சக்தியும் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தர முற்படாது என்பதுதான் கடந்த 20 ஆண்டு கால மேற்குமைய அனுசரணை முயற்சிகளின் மூலம் கற்றுக் கொள்ளப்பட்ட பாடம் ஆகும்.

இதை இப்படிக்கூறுவதன் மூலம் இந்தக்கட்டுரையானது இப்புவிசார் அரசியல் யதார்த்தத்தை நோக்கி தமிழர்கள் தமது கனவுகளை வளைக்க வேண்டும் என்று கூறவரவில்லை. மாறாகத் தமது கனவுகளை நோக்கி இந்தப்புவிசார் அரசியல் யதார்த்தத்தை வளைத்தெடுப்பதற்குரிய பொருத்தமான ஒரு வெளியுறவுத் தரிசனம் தமிழ் மக்களுக்குத் தேவை என்பதே இந்தக்கட்டுரை அழுத்திக்கூற முற்படும் விடயமாகும்.

அதற்கு முதலில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒரு பொதுவான வெளியுறவு அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக ஓடக் கூடாது. குறுக்கோட்டமும் கூடாது.

14

# இலங்கையின் இரட்டை நிலைப்பாடு




## சிங்களச் செய்தியாளரிடம் அமைச்சர் சொன்னது என்ன?

அ.நிக்ஸன்

ஈழத்தமிழர் விவகாரத்தை அமெரிக்க - இந்திய அரசுகள் கையாள்கின்றன என்பது பற்றிய விளக்கங்கள் அதனை மாற்றியமைக்க வேண்டிய வழிமுறைகள் இந்தப் பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. ஆனாலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் இதுவரையும் ஒரே குரலில் பேசுவதற்கான புள்ளியில் வருவதாக இல்லை. சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை ஆட்சி மாறினாலும் ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் ஒரு குரலில் பேசுகின்றனர்.

முன்னைய ஆட்சியாளர்கள் அணுகிய இராஜதந்திரத்தைப் புதிய ஆட்சியாளர்கள் தொடரும் பண்பு, ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் இருந்து தொடர்ந்து வருகின்றது என்பதற்குப் பல உதரணங்கள் உண்டு.

அரசியல் யாப்பு உருவாக்கங்கள் ஆகட்டும், சட்டத் திருத்தங்களாகட்டும் எல்லாமே ஈழத்தமிழர்களை நோக்கியது என்றால், கட்சி வேறுபாடுகளின்றியும் செயற்பாட்டுத் திறன் மிக்கவர்களை கட்சி வேறுபாடுகளுக்கப்பால் பயன்படுத்தும் உத்திகளும் பேரினக் கட்சிகளைப் பொறுத்தவரை, பெரியளவில் மாறுபடுவதில்லை. சமாதானப் பேச்சுக்காலத்தில் ரணில் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த மிலிந்த மொறகொட, மகிந்த சமரசிங்க, பேராசிரியர் பீரிஸ் ஆகியோரை ராஜபக்ச அரசாங்கமும் பயன்படுத்தியமையும் , 2015 இல் ரணில் அரசாங்கம் ஜெனிவாச் சூட்டைத் தணியவைத்த பரம இரகசியமும் சில உதாரணங்களாகும்

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பான விவாதம் வேறு வடிவத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இதனை எப்படி எதிர்கொள்வது என்பது தொடர்பாகக் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் இலங்கையின் மூத்த இராஜதந்திரிகள் பலர் ஆலோசித்து வருகின்றனர். இந்தோ- பசுபிக் பாதுகாப்பு விவகாரம் மற்றும் தென்சீனக்கடல் விவகாரம் பற்றி அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளினால் விவாதிக்கப்படும் சூழலில், இலங்கை எந்தப் பக்கம் என்ற கேள்வி எழுகின்றது. அமெரிக்க, இந்திய நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக இலங்கை இயங்கக்கூடிய ஏது நிலையும் குறிப்பாகச் சீனாவின் பக்கம் இலங்கை சாயும் என்ற கதைகளும் சில தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் உண்டு.

ஆனால் ஈழத்தமிழர்களின் விவகாரம் சிங்கள ஆட்சியாளர்கள் நினைப்பது போன்று, இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் கரைந்துவிடும் என்பது உறுதியென்றால் மாத்திரமே, இலங்கை சீனாவின் பக்கம் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். அதற்கேற்ப மூன்று வகையான அணுகுமுறைகளை இங்கே காணலாம். ஒன்று,மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத்தைப் பயன்படுத்தி இலங்கையை அமெரிக்க இந்திய அரசுகள் அச்சறுத்துகின்றமை.

இரண்டாவது,யாழ் .திண்ணைப் பேச்சு
மூன்றாவது ,அமெரிக்கச் சந்திப்புகள்.

இரண்டாவது மூன்றாவது அணுகுமுறைகளை அமெரிக்க - இந்திய அரசுகள் மூலமாக இலங்கை கையாளுகின்றது. அதாவது ஜெனிவா விவாதத்தை மேலும் தணிக்கும் உத்திகளே அவை.

இந்த இரு அணுகுமுறைகளும் வெவ்வேறு முனைகளில் சென்றாலும், தற்போது நடைமுறையில் உள்ள இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புடன் அல்லது புதிய யாப்புடன் ஈழத் தமிழர்களைக் கரைத்துவிடுவதற்கான ஏற்பாடுகள்தான் என்பது வெளிப்படை. இங்கே சிங்கள ஆட்சியாளர்கள் விரும்புவது போன்று ஈழத்தமிழர்களைக் கையாண்டால், இலங்கையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்ற நம்பிக்கையோடுதான், அமெரிக்க=இந்திய அரசுகள் இலங்கையின் மேற்படி இரு அணுகுமுறைகளையும் கையில் எடுத்திருக்கின்றன.

அதாவது இலங்கையை அமெரிக்க-இந்திய அரசுகள் நம்புகின்றன. இப்படித்தான் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போருக்கு அமெரிக்க-இந்திய அரசுகள் ஏன் சீனா உள்ளிட்ட வேறு வல்லாதிக்க நாடுகளும் இலங்கைக்கு உதவியளித்திருந்தன.

ஏட்டிக்குப் போட்டியாக வழங்கப்பட்ட அத்தனை உதவிகளையும் பயன்படுத்திப் புலிகளை இல்லாதொழித்த பின்னரான சூழலில், இன்றுவரை சீனாவுடன் குறைந்தது ஏழு அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய ஒப்பந்தங்களில் இலங்கை கைச்சாத்திட்டிருக்கின்றது. மேலும் சில ஒப்பந்தங்கள் சீன நிறுவனங்களோடு செய்யப்பட்டுமிருக்கின்றன.

ஆனால் இலங்கையின் இந்த ஏமாற்று இராஜதந்திரம், அமெரிக்க, இந்திய அரசுகளுக்கு ஏன் புரிவதில்லை என்ற சந்தேகங்களும் வலுக்கின்றன.

அத்துடன் இலங்கை சிறியதொரு நாடு என்ற எண்ணக் கருவுடன் செயற்பட்டு, இலங்கையின் இறைமை, ஆள்புல ஒற்றுமையின் அவசியம் என்று மாத்திரம் பேசுவதால், இலங்கைத் தீவில் வசிக்கும் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் வஞ்சிக்கப்படுகின்றன என்பதையும் அமெரிக்க ,இந்திய அரசுகள் புரிந்துகொள்வதில்லையா என்ற பரிதாபமான கேள்விகளும் உண்டு.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தத் தயாராக இருப்பதாகவும் தமிழ்த்தேசியக் கட்சிகள் அதனை ஏற்க வேண்டுமெனவும் இலங்கை 2015 ஆம் ஆண்டு அமெரிக்க, இந்திய அரசுகளுக்கு உறுதியளித்தது. அதுமாத்திரமல்ல 2010/14 ஆம் ஆண்டுகளில் '13 பிளஸ்' என அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழி போன்றவற்றை மையப்படுத்தியே கொழும்புக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஹர்ஸவர்த்தன் ஶ்ரீங்லா , பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் வலியுறுத்தியதாகத் தெரிகின்றது. அமைச்சர் ரமேஸ் பத்திரண, இது பற்றிச் சிங்களச் செய்தியாளர் ஒருவரிடம் கூறியுள்ளார். சட்டத்தரணி சுமந்திரன் குழுவின் அமெரிக்கப் பயணம், யாழ் .திண்ணைப் பேச்சுக்கள் குறித்து அந்தச் சிங்களச் செய்தியாளர் கேட்டிருக்கிறார். இதற்குப் பதிலளித்தபோதே ஹர்ஸவர்த்தன் கூறிச் சென்ற விடயத்தை அமைச்சர் ரமேஸ் பத்திரண அதிகாரபூர்வமற்ற முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

“தமிழ்த்தேசியக் கட்சிகள் கூடிப் பேசட்டும். ஆனால் புதிய யாப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் மாற்றப்படலாம்” எனவும் அந்தச் செய்தியாளரிடம் ரமேஸ் பத்திரண கூறினாரென அறிய முடிகின்றது. அதேவேளை ”13 பற்றிப் பேச வேண்டாமென ஜனாதிபதியின் தரப்பு தமக்குத் தனிப்பட்ட முறையில் கூறியது” என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, சென்ற புதன்கிழமை நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். ஆகவே இந்த இரு தகவல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ராஜபக்ச அரசாங்கத்தின் இரட்டை வேடம் வெளிப்படுகின்றது.

ஒரு புறத்தில் ' 13 பற்றி தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒரு நிலைப்பாட்டுக்கு வரட்டும். அதற்கு ஒத்துழையுங்கள்' என்று அமெரிக்க-இந்திய அரசுகளுக்கும், மறுபுறத்தில் '13 இல்லை புதிய யாப்பின் பிரகாரமே அனைத்தும் கையாளப்படும் 'என்று சிங்கள எதிர்க் கட்சிகளிடமும் அரசாங்கம் சொல்லியிருக்கின்றது. கடந்தவாரம் முழுவதும் கொழும்பில் வெளிவந்த சிங்கள நாளேடுகளை அவதானித்தால், புதிய அரசியல் யாப்புப் பற்றியும் உள்ளூராட்சி சபைகளின் எல்லை மீள் நிர்ணயம் முடிவடைந்த பின்னரே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படுமெனவும் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. ஆங்கிலப் பத்திரிகைகள் 13ஐ ஆதரிப்பது போன்றதொரு தொனியில் கட்டுரைகளுக்கும், செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருந்தன. ஆனாலும் காணி, பொலிஸ் அதிகாரங்கள், தொல்பொருட்களைக் கையாளும் விடயங்கள் கொழும்பில் இருக்க வேண்டுமென்ற கருதுத்துக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

13 ஐ ஏற்கமுடியாதென ஜனாதிபதியின் தரப்புத் தம்மிடம் தனிப்பட்ட முறையில் கூறியதாக லக்ஸ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் கூறிய விடயம், ஆங்கில நாளேடுகளில் வெளிவரவில்லை. அந்தச் செய்தி சிங்கள நாளேடு ஒன்றில் முக்கியம் பெற்றிருந்தது. தமிழ் நாளேடுகள் அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், லக்ஸ்மன் கிரியெல்லவின் உரைக்கு வேறு தலைப்பிட்டிருந்தன.

ஆகவே ஈழத்தமிழர் விவகாரத்தில் சர்வதேச சமூகத்தை இடது கையாலும் , வலது கையால் சிங்கள மக்களையும் கையாளும் பண்பு சிங்கள ஆட்சியாளர்களிடம் 1983 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலே இருந்து வருகின்றது. (அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளும் இந்தியாவும் இலங்கையோடு சேர்ந்து தமிழ்மக்களை ஏமாற்றிய சந்தர்ப்பங்களே அதிகம்) இலங்கை தங்களை ஏமாற்றுவது, அவமானப்படுத்துவது தொடர்பாகக் கொழும்பில் உள்ள அமெரிக்க, இந்தியத் தூதுவர்கள் அறியாமல் இருக்கின்றனர் எனவும் கூற முடியாது. 1987 இல் கொழும்பில் நடைபெற்ற அணிவகுப்பின்போது இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய முற்பட்டனர்.

1995 ஆம் ஆண்டு இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் குறித்துக் கருத்து வெளியிட்டிருந்த பிரித்தானியத் தூதுவர் , கொழும்பில் அவமானப்படுத்தப்பட்டார். இலங்கை இராணுவம் பொதுமக்களைத் துன்புறுத்தாமல், போர் விதிகள் பின்பற்றப்பட வேண்டுமென அப்போதிருந்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி, சந்திரிகா அரசாங்கத்தைக் கேட்டதுபோது, உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா தலையிடக்கூடாதென அப்போதிருந்த வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிரிகாமர் எச்சரிக்கை விடுத்திருந்தார். 2006 ஆம் ஆண்டு கொழும்பில் இருந்த இந்திய அப்பலோ மருத்துவமனையின் கூடுதல் பங்குகளை சர்வதேச விதிகளையும் மீறி இலங்கை பெற்றமை தொடர்பாக அப்போதைய இந்தியத் தூதுவர் நிருபன் சென் விளக்கம் கோரியிருந்தார். அதனால் அப்போது அமைச்சராக இருந்த அனுரா பண்டாரநாயக்கா, நாடாளுமன்ற உரையின்போது தூதுவர் நிருபன் சென்னை அவமானப்படுத்தினார். அப்பலோ மருத்துவமனைக்கு இலங்கை பெயர் மாற்றியமை தொடர்பாகப் பெரும் சர்ச்சை எழுந்தது. இறுதியில் இலங்கையே வெற்றிகொண்டது.

கொழும்புத்துறைமுக கிழக்கு முனைய அபிவிருத்தி ஒப்பந்தம்,, அமெரிக்க மிலேனியம் சவால்கள் உள்ளிட்ட பல சர்வதேச ஒப்பந்தங்கள் இலங்கையினால் நிராகரிக்கப்பட்டன. இப்படிப் பல ஏமாற்றுகள் நடந்தும், இன்றுவரை இலங்கையை நம்புகின்ற போக்கும், ஈழத்தமிழர் விவகாரத்தை இலங்கை ஒற்றையாட்சிக்குள்ளேயே முடக்கி விடுவதற்கான ஏற்பாடுகளிலும் அமெரிக்க - இந்திய அரசுகள் ஏன் ஈடுபடுகின்றன?

ஜெனிவாவைக் காண்பித்து இலங்கையை மிரட்டுகிறார்களே தவிர, பாதிக்கப்பட்ட மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியோ அல்லது வடக்கு, கிழக்கில் வேகமாக இடம்பெற்று வரும் சிங்களக் குடியேற்றங்கள் குறித்தோ இதுவரை ஒரு கண்டன அறிக்கைகூட இந்த நாடுகளிடமிருந்து வெளியாகவில்லை. 2012 ஆம் ஆண்டில் இருந்து இந்த ஆண்டு வரை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக்கூட இலங்கை அமுல்படுத்தவில்லை. இவ்வாறு சர்வதேசத் தீர்மானங்கள், ஒப்பந்தங்களை மீறுகின்ற இலங்கையைத் தண்டிக்க முடியாத அமெரிக்க-இந்திய அரசுகள், 13 ஐ இலங்கை நடைமுறைப்படுத்தும் என்று எப்படி நம்புகின்றன? 2009 ஆம் ஆண்டு போர் இல்லாதொழிக்கப்பட்டதும் நிரந்த அரசியல் தீர்வு என்று மஹிந்த ராஜபக்ச அப்போது அமெரிக்க, இந்திய அரசுகளிடம் உறுதியளித்திருந்தார்.

இந்த விடயத்தைக் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் சம்பந்தன் வெளிப்படுத்தியிருந்தார். அமெரிக்க-இந்தியத் தூதுவர்களின் கதையைக் கேட்டுத் தானும் நம்பியதாகவும் அமெரிக்காவும் இந்தியாவும் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டதாகவும் சம்பந்தன் கவலையும் வெளியிட்டிருந்தார்.

ஆகவே இதன் பின்னணியை நோக்கினால் அமெரிக்கப் பேச்சும், யாழ் திண்ணைச் சந்திப்பும் எந்த அடிப்படையில் சாத்தியமாகும்? 2009 இல் போர் இல்லாதொழிக்கப்பட்டுப் பின்னர் நிரந்த அரசியல் தீர்வு என்று வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றாமலும், இந்தோ-பசுபிக் பாதுகாப்பு விடயத்தில் இன்னமும் முழுமையாக தங்களோடு இலங்கை இல்லையென்று தெரிந்தும், 13 என்ற மற்றுமொரு உறுதிமொழியை நம்புகின்றன அமெரிக்க, இந்திய அரசுகள்.

அமெரிக்காவோடும், இந்தியாவோடும் இலங்கை நிற்பதாகக் காட்டிக்கொள்ளப்படும் சமிக்ஞையின் உண்மைத் தன்மை எதுவரை என்பதை அறிந்துகொள்வதற்கு, 13 ஐ வைத்துப் பரிசோதிப்பதைவிட, ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா துணிவோடு முழுமையாகக் கையில் எடுக்குமானால், வேறு வழியின்றி சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றும் இராஜதந்திரத்தைக் கைவிடுவார்கள். அதற்கான சூழல் உண்டு.

வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சிக் கட்டமைப்பை (North East Combined Autonomous Structure) உருவாக்குவதில் தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒரே குரலில் ஒன்றித்து, முஸ்லிம் கட்சிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லாமலில்லை. அதற்கான தமிழ் இராஜதந்திரிகள் யுார்? மூளையை விற்பனை செய்யும் வியாபாரிகள் ஒற்றையாட்சிக்கே பணியாற்றுவார்கள்.

எஸ். கிருபானந்தகுமாரன்[ MVSc]
கால்நடை மருத்துவர்



# மாடறுப்பு தடைச் சட்டம்

## இலங்கையின் பாலுற்பத்தித் துறையின் முன்னுள்ள சவால்கள்

**பால் இன்று நேற்று நாளை 6**

இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நடைமுறையிலுள்ள ஐந்து சட்டங்களை திருத்தம் செய்வதன் [ Amendment] மூலம் சட்ட ரீதியாக மாடறுப்பைத் தடை செய்ய முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். கடந்த செப்ரெம்பர் மாத கடைசியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்குரிய அனுமதியையும் அவர் பெற்றுள்ளதோடு சட்ட திருத்த நடவடிக்கைகளும் முழு வீச்சில் இடம்பெறுகின்றன. இந்தத் திருத்தங்கள் முழுமை பெற்றதும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கு பெறப்படும் ஒப்புதலோடு சட்டமாக்கப்படும். 2/3 பெரும்பான்மையை கொண்டுள்ள நடைமுறை அரசுக்கு இது ஒன்றும் பெரிய சவால் கிடையாது. கடந்த பொதுத் தேர்தலில் ஆளும் பொதுஜன பெரமுன வெற்றி பெற்ற பின் இடம்பெற்ற கட்சிக் கூட்டம் ஒன்றில் பிரதமர் இது தொடர்பாக முதன்முதலில் கருத்தை வெளியிட்டு அங்கு சம்மதத்தை பெற்றிருந்த போது, நாடளாவிய ரீதியில் கால்நடை வளர்ப்பாளர்கள் மத்தியில் ஒருவித சலசலப்புத் தோன்றியிருந்தது. எனினும் இன்று இந்தச் சட்டத்திருத்தங்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. எனக்கு தெரிந்த வரை மிக விரைவில் இவை திருத்தப்பட்டு இலங்கையில் மாடறுப்பு தடை செய்யப்படவுள்ளது.

இலங்கையில் மாடறுப்பு தொடர்பாக பின்வரும் சட்டங்கள் உள்ளன.

- 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குச் சட்டம் [ Animal act ]
- 1893 ஆம் ஆண்டு 9ஆம் இலக்க இறைச்சி வெட்டுனர்களின் சட்டம்[ Butchers ordinance]
- மாநகர, நகர சபை மற்றும் பிரதேச சபை சட்டங்கள் .

இவற்றில் உள்ள மாடறுப்பு [ cattle slaughtering ] தொடர்பான விடயங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இலங்கையில் மாடறுப்பு தொடர்பாக தொடர்ச்சியான எதிர்ப்புக்களை பௌத்த மற்றும் இந்து அமைப்புக்கள் எழுப்பி வந்த நிலையில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிடம் கூட முன்பு ஒருமுறை, மாடறுப்பைத் தடை செய்யக் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு, " ஏனைய விலங்குகளை கொலை செய்வதை நிறுத்தினால் உடனடியாக இதனையும் ( மாடறுப்பையும்) நிறுத்தலாம் " என அவர் கூறி ,அந்த யோசனையை நிராகரித்திருந்தாரென ஒரு தகவல் உள்ளது. 2009 ஆம் ஆண்டில் விஜயதாச ராஜபக்சவால் முதன் முதலில் நாடாளுமன்றில் தனிநபர் பிரேரணையாக மாடறுப்பு தடைச் சட்டம் கொண்டுவரப் பட்ட போதும் போதிய ஆதரவு இன்மையால் அன்று அது சாத்தியப்படவில்லை.

2013 ஆம் ஆண்டில் கண்டி தலதா மாளிகையின் முன் பௌத்த துறவியொருவர் மாடறுப்பை நிறுத்தக் கோரி தனக்குத் தானே தீமூட்டியும் இறந்திருந்தார். கண்டி உள்ளிட்ட, பல பௌத்த புனித நகரங்களில் மாடறுப்புக்குத் தடை உள்ளது. [கண்டிக்கு வெளியே மாடுகள் அறுக்கப்பட்டே மாட்டிறைச்சி அங்கு கொண்டுவரப்படுகிறது. இத்தனைக்கும் உலகத் தரம் வாய்ந்த விலங்கு கொல்களம் ஒன்று கண்டியில் அமைக்கப்பட்டு இற்றை வரை மத பீடங்களின் எதிர்ப்பு காரணமாக அது திறக்கப்படவே இல்லை.] மாடுகளை இறைச்சிக்கு கொல்வது தொடர்பாக சமய அமைப்புக்களும் விலங்குகள் நல தன்னார்வ அமைப்புகளும் எதிர்ப்புப் பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதையும் காணமுடிகிறது. சில விலங்குகள் கொல்களங்களுக்கு கொண்டுவரப்படும் மாடுகளை பல பௌத்த துறவிகள் மக்களுடன் புகுந்து பலவந்தமாக மீட்டு மக்களுக்கு பகிர்ந்தளிப்பதுவும் அவதானிக்கப்படுகிறது. அதாவது மாடறுப்பு ஒரு குறித்த சமயத்தவருக்கு மட்டும் உரித்தானது என்பது போலவும் அவர்கள் மாத்திரம் தான் மாட்டிறைச்சி உண்பது போல ஒரு வகை விம்பமும் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. எதிர்ப்பாளர்களின் நடவடிக்கைகளாலோ, என்னவோ இந்த விடயம் தற்போது சட்டத்திருத்தம் வரை வந்துள்ளது.

அண்மைக் காலமாக இலங்கையின் பாலுற்பத்தியில் தன்னிறைவு காண எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக் [illegible] போடக் கூடிய ஒரு நகர்வாகவே இதனைப் பார்க்க முடிகிறது. கால்நடை வளர்ப்பு தொடர்பான விற்பன்னர்கள் யாரும் இந்த நகர்வை விரும்ப மாட்டார்கள். எந்த நாட்டிலும் பண்ணைகளில் உள்ள தேவையற்ற மாடுகளைக் கழிக்காது போனால் பாலுற்பத்தியில் தன்னிறைவு காண முடியாது. யார் இந்த மாதிரியான முடிவை எடுக்கத் தூண்டினார்கள் என்னும் ஐயம் எனக்குள் எழுகிறது. கால்நடை வளர்ப்பு பொருளாதாரம் மற்றும் பால் உற்பத்தித் துறையின் எதிர்காலத்தை கருத்திற் கொள்ளாமல் வெறுமனே உணர்வு ரீதியான குறிப்பாக 'சமய அரசியல் 'இந்த முடிவில் இருப்பதாக கால்நடை வளர்ப்பின் விற்பன்னர்கள் கருதுகின்றனர். இந்தியாவிலும் இதே போன்ற நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு மாடறுப்பு பல மாநிலங்களில் தடை செய்யப்பட்டுள்ளது. இரண்டு அரசியல் நகர்வுகளையும் ஒப்பு நோக்க முடியும். அங்கு வட இந்தியாவில் இந்தத் தடை ஓரளவுக்கு சாத்தியமான போதும் கல்வியறிவு கூடிய தென்னிந்தியப் பகுதிகளில் சாத்தியப்படவில்லை.




சில நாட்களுக்கு முன் இலங்கை கால்நடை வைத்தியசபையினால் [ srilanka veterinary Association SLVA] ஒழுங்கு செய்யப்பட்ட இணைய வழிக் ப்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருந்தது. இலங்கையின் கால்நடை வளர்ப்பு தொடர்பான அதிகாரிகள் ,விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், இலங்கையின் ஒரே ஒரு கால்நடை வைத்திய பீடமான பேராதனை பல்கலைக்கழக விலங்கு விஞ்ஞான பீடாதிபதி , அமைச்சு செயலாளர்களாக உள்ள கால்நடை வைத்தியர்கள், மத்திய, மாகாண அரச பணிப்பாளர்கள், கால்நடை வைத்தியர்கள், இலங்கையின் பெரும் கால்நடை பண்ணைகளின் முகாமையாளர்கள் என பல கால்நடை உற்பத்தி தொடர்பான முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். இங்கு கலந்து கொண்டிருந்த அனைவரும் இந்தத் தடை தொடர்பாக எதிர்ப்பை வெளியிட்டிருந்ததோடு இந்த முடிவு கால்நடை உற்பத்தி மற்றும் பால் வளத் துறையைக் கடுமையாகப் பாதிக்கும் என தமது கருத்துகளையும் வெளியிட்டிருந்தனர். இது தொடர்பாக இறுதி முடிவை எடுக்கு முன் அரசின் உயர் மட்டத்துக்கு இதன் ஆபத்தை புரிய வைக்க கடும் பிரயத்தனங்களை எடுப்பதாகவும் சொல்லியிருந்தனர் .

எனக்குத் தெரிந்த வரை இலங்கையில் கால்நடை உற்பத்தி துறையின் எந்த முடிவுகளையும் இந்த குழாத்தின் ஆலோசனை இன்றி செய்யவே முடியாது. இவர்களைத் தாண்டி இலங்கையில் யாருமே கால்நடை தொடர்பில் நிபுணத்துவம் பெற்றவர்கள் கிடையாது. பெரும்பாலான அரச மற்றும் தனியார் கால்நடை வைத்தியர்கள் இதற்குள் அடங்குகிறார்கள். என்னுடைய இந்த கட்டுரைத் தொடர் அந்த இணையவழி கருத்துப் பகிர்வையும் கடந்த சில வருடங்களாக இந்த விடயம் தொடர்பாக தென்னிலங்கை ஊடகங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களையும் இந்தியாவில் பல மாநிலங்களில் நடைமுறையிலுள்ள மாடறுப்பு தடை தொடர்பான விடயங்களையும் கள மட்டத்தில் நான் பார்க்கும் விடயங்களையும் அடிப்படையாக கொண்டதே.

இலங்கையில் தற்போதுள்ள மாடறுப்பு தொடர்பான சட்டங்கள் சொல்வது என்ன?

### விலங்குச் சட்டம்

- 12 வயதுக்கு உட்பட்ட பசு மாடுகளைக் கொல்ல முடியாது.
- இனப்பெருக்க ஆற்றலுடைய மாடுகளைக் கொல்ல முடியாது
- விவசாய தேவைக்கு பயன்படுத்தப்படும் மாடுகளைக் கொல்ல முடியாது.

இந்த விடயங்களை அரச கால்நடை வைத்தியர், நகர , மாநகர , பிரதேச சபைகள் நியமித்துள்ள கால்நடை வைத்தியர், அல்லது அந்த நகர மாநகர, மற்றும் பிரதேச சபைகள் நியமித்துள்ள அதிகாரி உறுதிப்படுத்த வேண்டும். மாடுகள் என்னும் போது பசு மற்றும் எருமை மாடுகள் அடங்குகின்றன. இந்த சட்டம் 1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்பதோடு அடிக்கடி பல சட்ட திருத்தங்களுக்கும் உட்பட்டது.

### இறைச்சி வெட்டுவோர் சட்டம் [ Butchers ordinance]

மாடு / விலங்குகளை உணவுக்காக வெட்டுபவர் மற்றும் மாடுகளைக் கொல்லும் கொல்களம் தொடர்பான சட்டம். இந்த சட்டம் சுதந்திரத்துக்கு முன் அதாவது பிரிட்டிஷ் ஆட்சியில் 1893 உருவாக்கப்பட்டதோடு காலத்துக்கு காலம் அதில் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

விலங்குகளைக் கொல்லும் கொல்களம் மற்றும் இறைச்சிக் கடைகளை நடத்தும் மாநகர ,நகர மற்றும் பிரதேச சபை சட்டங்கள் கொல்களங்களின் மீது மேற்படி சபைகளின் அதிகாரம், விற்பனை செய்வதன் அதிகாரம் தொடர்பான சட்டங்கள் இதற்குள் அடங்குகிறது.


இந்த விடயம் தொடர்பான சுற்று நிருபங்கள் மாடுகளை கொண்டு செல்லுதல் தொடர்பான அதிவிசேட வர்த்தமானிகள் [ விலங்கு சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களோடு தொடர்புடையவை (உ+ம்: 2009 ஆம் ஆண்டு 1629/17 இலக்க அதிவிசேட வர்த்தமானி போன்றன. இவை ஒரு மாடு வளர்ப்பு இடத்திலிருந்து எப்படி இன்னொரு இடத்துக்கு செல்கிறது என்பதை உறுதிப்படுத்துகின்றன.]

இவை திருத்தப்பட்டு அதாவது மாடறுப்பு விடயங்கள் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டு இலங்கையில் மாடறுப்பது சட்ட விரோதமாக்கப்படப் போகின்றது. அதாவது இந்தச் சட்டங்களை மீறி யாரும் செய்தால் சட்ட விரோதம். தண்டனைக்குரியது,

அத்துடன் மேலதிகமாக விலங்கு நலச் சட்டம் [ Animal welfare act] ஒன்று உருவாக்கப்பட்டு அதுவும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

அந்தச் சட்டமும் மிக விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்படவுள்ளது. விலங்குகளை துன்புறுத்தல், முறையற்ற விதத்தில் அவற்றை வளர்த்தல் போன்ற பல விடயங்களுக்கு தண்டனை தரும் வகையில் இந்தச் சட்டம் அமையவுள்ள நிலையில் இந்தச் சட்டத்தின் மூலமும் இலங்கை கால்நடை வளர்ப்பு துறை மிகப்பெரிய சவால்களைச் சந்திக்கும் என்பது வெளிப்படை. அடுத்தடுத்த வாரங்களில் இந்த சட்டம் எப்படி பால் உற்பத்தி துறையில் செல்வாக்கு செலுத்தும் என்பதை ஆராய்வோம்.

# சொற்சிலம்பம் போட்டி 59



அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ........................

........................................................

கையொப்பம்:.................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இலங்கையின் புனித நகரம் 6. திசைக்கு வரும் 7. வெட்டிச்சாயச் செய் 8. இருபாலாரில் ஒரு பாலர் 9. பாணுடன் சேர்த்து உண்பது 11. ஒரு மிருகம் 12. அலறல் 13. ஓலையால் பின்னிய பெட்டி 15. சாதுவான மிருகம் 17. பெருமையில் சிறந்தவர் 18. ஓர் அரிசி வகை 19. ஒரு நுட்பமான நேரம் 20. பன்மையைக் குறிப்பது 21. சாப்பிடு 22. மக்கள் கூட்டத்தின் அடிப்படைத் தொகுதி

## மேலிருந்து கீழ்

1. பாதுகாப்பாக அமைவது 2. உறுதியானது 3. அன்பின் ஒருவடிவம் 4. ஆட்டின் குட்டி 5. அரசனுக்கு எதிர்ச்சொல் 8. தொடக்கம் 10. நகரம் 11. சேர் 12. இந்துக்களின் பிரணவம் 13. வெண்ணெய் உண்டவன் 14. மண்ணுக்கு முந்தியது 16. குணாம்சம் 17. நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டவன் 18. (சிறு)நீர் (20) நித்திரைக்குப் போ.

### சொற்சிலம்பம் போட்டி 58 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சங்கதி 4. வரகு 6. பருமன் 8. தகடு 10. கமலம் 11. திரு 12. சரம் 13. வாசகம் 15. கும் 16. கடுகதி 17. ஏறு 18. விசும்பு 20. புலம்பல் 21. பாவி

**மேலிருந்து கீழ்**

1. சந்ததி 2. கபடு 3. திரு 4. வன்மம் 5. குடும்பம் 7. மகரம் 9. கருவாடு 12. சகதி 14. சகலம் 15. குறும்பா 16. கம்பு 17.ஏசு 18. வில் 19. புவி

### சொற்சிலம்பம் போட்டி இல.59

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**03.12.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 58இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**பா.அஸ்வினி**
தரம்,6 சைவப்பிரகாச வித்தியாசாலை,

**2 ஆம் பரிசு**
**சாரதா மருதடியான்**
புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை

**3 ஆம் பரிசு**
**ச.சோபிகா**
பாரதி வீதி, கந்தரோடை, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**ஆ.ருக்மணிதேவி**
சிவன் வீதி, ஆவரங்கால் புத்தூர்.

**5 ஆம் பரிசு**
**பொ.சிவகாமி**
அம்பிகாவத்தை வீதி, சங்கானை.



# ஆபிரிக்கா அழுகையின் கண்டம்!

○ ஆர்.பிரகாஷ்

ஒரு பிரமாண்டமான கட்டடத்தைக் கட்டுகின்றோம். அதற்கான கட்டுமானப் பணிகள் வெற்றிகரமாகச் சென்றுகொண்டிருக்கின்றன என்று எண்ணிக்கொண்டிருக்கையில், திடீரென அந்தக் கட்டம் இடிந்து வீழ்ந்து தரைமட்டமானால் எப்படியிருக்கும்? அப்படியான மனநிலையில்தான் இன்று உலக சுகாதார நிறுவனமும் உலக நாடுகளும் உள்ளன.

சீனாவின் வுகானில் ஆரம்பித்த கொரோனா வைரஸ், இன்று ஒட்டுமொத்த உலகையும் முடக்கிப் போட்டுள்ளது. 26 கோடிக்கும் அதிகமானவர்கள் இந்தப் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 52 லட்சத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் இந்தக் கொடூரத் தொற்றால் காவுகொள்ளப்பட்டுள்ளன. பில்லியன் டொலரில் பொருளாதார இழப்பு சென்றுகொண்டிருக்கின்றது. டெல்டா, அல்பா, பீட்டா, காமா என்று ஏகப்பட்ட திரிபுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிரான நகர்வுகளை முடக்கிக் கொண்டிருக்கையில் உலக சுகாதார ஸ்தாபனத்துக்கும் உலக நாடுகளுக்கும் பேரிடியாக இறங்கியுள்ளது ஒமிக்ரோன்.

### டெல்டாவை விட ஆபத்தானது

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ளது இந்தத் திரிபு. இதுவரைக்கும் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் திரிபுகளில் டெல்டாவே அதி பயங்கரமானது என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்தாக இருக்கையில் டெல்டாவை விட பல மடங்கு சக்தி மிக்கது இந்த ஒமிக்ரோன் என்று புதிய அறிக்கையை அபாய எச்சரிக்கையுடன் தூக்கிப்போட்டுள்ளது உலக சுகாதார ஸ்தாபனம். இந்தத் திரிபு அடையாளம் காணப்பட்ட 12 மணிநேரத்தில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் முக்கி யஸ்தர்கள் அவசரமாகக் கூடிக் கலநதுரையாடியுள்ளனர். ஒமிக்ரோன் பற்றிய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு 3 மணி நேரத்துக்குள் தென்னாபிரிக்காவைத் தனிமைப்படுத்தியுள்ளன உலக நாடுகள். தென்னாபிரிக்காவுக்குச் செல்வதற்கோ அல்லது அங்கிருந்து எவரும் வருவதற்கோ அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் தடை செய்துள்ளன.

### ஒமிக்ரோனின் அபாயத்தன்மை

இதுவரை கண்டறியப்பட்ட திரிபுகளை விட ஒமிக்ரோன் அதி அபாயகரம் மிக்கது என்று ஐந்து விடயங்களை அடிப்படையாக வைத்து அறிக்கையிடப்பட்டுள்ளது. கூடுதல் பரவுகை, அதிக நேரம் உயிர்வாழ்தல், உயிரிழப்பு வீதத்தை அதிகம் ஏற்படுத்தும் தன்மை உள்ளமை, இதுவரை ஏற்றிய தடுப்பூசிகளை செயலிழக்க வைக்கின்றமை மற்றும் ஆபிரிக்க தேசத்தில் இருந்து அடையாளப்படுத்தப்பட்டமை என்பன அந்த ஐந்து காரணங்களுமாகும்.

இதுவரைக்கும் தத்தம் நாட்டு மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றுவதில் உலக வல்லரசுகள் அதிகம் அக்கறை காட்டியுள்ளன. சில நாடுகள் ஒருபடி மேலே சென்று பூஸ்டர் டோஸ்களைக்கூட ஏற்றுகின்றன. இதனால் தடுப்பூசிச் சமநிலை என்பது இருக்கவில்லை. குறிப்பாக ஆபிரிக்க நாடுகளுக்கு தடுப்பூசிகள் கிடைக்கவில்லை. பணக்கார நாடுகளையே தடுப்பூசிகள் சுற்றிக்கொண்டிருந்தன.


இத்தனைக்கும் சேர்த்துத்தான் இப்போது இறுக்கமாகப் பழிவாங்கியுள்ளது இயற்கை. ஆபிரிக்க மக்களுக்குத் தடுப்பூசி சென்றடைவது குறைவாக இருக்கையில் இந்த ஒமிக்ரோன் அவர்களை தன் பிடிக்குள் அதிகமதிகமாக ஆட்கொள்ளும் என்பது வெள்ளிடைமலை. அவ்வாறு ஆபிரிக்காவில் இருந்து இந்த வைரஸ் வேறு நாடுகளுக்குப் பரவினால் இதுவரைக்கும் முன்னெடுக்கப்பட்ட அத்தனைத் தடுப்பூசித் திட்டத்தை யும் ஒமிக்ரோன் இல்லாமலாக்கும். இந்தப் பத்தியில் ஏலவே குறிப்பிட்ட தைப்போன்று பெரும் கட்டடமாகக் கட்டியெழுப்பப்பட்ட இந்தத் தடுப்பூசிக் கட்டமைப்பு ஒமிக்ரோனால் தவிடுபொடியாகும். எமக்குத் தொற்று ஏற்படக்கூடாதெனில் எம் அயலவனுக்கும் ஏற்படக்கூடாது என்ற குறைந்தபட்சப் புரிதலை உலக நாடுகள் குறிப்பாக வல்லரசுகள் கொண்டிருந்தால் இன்று ஒட்டுமொத்த ஆபிரிக்கத் தேசத்தையும் தனிமைப்படுத்தியிருக்க வேண்டியிராதோ என்னமொ? ஆபிரிக்கா அழுகையின் கண்டம்தானே.!



# அறிந்தும் அறியாமலும்

O சுழியன்





## பட்டியலில் மஹிந்தானந்த!

ஆளுங்கூட்டணியின் தலைமைக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களுக்குமிடையிலான அரசியல் போர் உக்கிரமடைந்துள்ளது. இதுவரையில் ஊடகச் சந்திப்புகள் மூலமே சொற்போரில் ஈடுபட்ட அவர்கள் தற்போது அதிஉயர் சபையான நாடாளுமன்றத்திலும் நேரடியாகவே கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது 200 வாகனங்களைப் பயன்படுத்தினார், ஜனாதிபதி செயலகத்துக்கான செலவீனங்கள் அதிகமாக இருந்தது, தற்போது மூன்று வீடுகளை ஒன்றிணைத்தே தங்கியுள்ளார் என்றெல்லாம் கடும் விமர்சனங்களை முன்வைத்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, தற்போதைய ஜனாதிபதியை புகழ்ந்து பேசினார்.

இதனால் கடுப்பாகிய சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, மஹிந்தானந்த வெளியிட்ட கருத்துகளை நிராகரித்ததுடன், மைத்திரி முன்னெடுத்த வேலைத்திட்டங்களையெல்லாம் பட்டியலிட்டு செலவீனங்களுக்கான காரணத்தை விவரித்தார்.

" எங்களை தாக்குங்கள் பொறுத்துக்கொள்கின்றோம். எங்கள் தலைமைமீது கைவைக்க வேண்டாம். சாக்கடையை கிளறிவிட்டீர்கள். இன்னும் கிளறுங்கள். நாறும். மேலும் பல விடயங்களும் வெளிச்சத்துக்கு வரும். எங்களை தாக்கினால் நாமும் மௌனம் காக்கமாட்டோம்." என கடுந்தொனியில் குறிப்பிட்டார் தயாசிறி.

இதனால் சீற்றமடைந்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே,

" நாங்கள் திருநங்கைகள் அல்லர். முதுகெலும்பிருக்கின்றது. எதையும் முன்னால்தான் பேசுவோம். முதுகில் குத்தமாட்டோம் .எங்களை தாக்கினால் நாமும் திருப்பித் தாக்குவோம். அலோசியஸின் செக் முதல் எங்களிடமும் கதைகள் உள்ளன. " என அனல் கக்கும் அறிவிப்பை விடுத்தார்

இந்த சமரில் இணைந்து கொண்ட மைத்திரி,

" மஹிந்தானந்த அளுத்கமகே ஆவேசமாக உரையாற்றினார். எம்மைத் தாக்கினால் நாம் திருப்ப அடிக்கமாட்டோம். கருணை காட்டுவோம். அவர்களின் பாணியில் திருப்பி அடிக்கும் குணம் எமக்கு கிடையாது. ஆனால் நாம் அடித்தால் அது வேறுமாதிரியாக இருக்கும் என்பதையும் கூறிக்கொள்கின்றேன்.

கண்ணாடிக் கூட்டுக்குள் இருந்துகொண்டு கல் எறிவதற்கு நான் விரும்பவில்லை. நான் ஜனாதிபதியாக இருந்தபோது, ஜனாதிபதியொருவர் எப்படிச் செயற்பட வேண்டும் என முன்மாதிரியை வழங்கினேன். அடித்துக்கொண்டால் எவ்வாறான காயங்கள் ஏற்படும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்." என எச்சரித்தார். உரப்பிரச்சினையால் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு விவசாய அமைச்சரே பொறுப்புக்கூறவேண்டும் எனவும் கூறிவிட்டு அமர்ந்தார். அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர்களான நிமல் லான்சா, திலும் அமுனுகம, ரொஷான் ரணசிங்க, லொஹான் ரத்வத்த, செஷயான் சேமிங்க உட்பட மேலும் சில மொட்டு கட்சி எம்.பிக்கள் சுதந்திரக்கட்சியை விமர்சித்துவந்த நிலையில் தற்போது அந்தப் பட்டியலில் மஹிந்தானந்த அளுத்கமகேயும் புதிதாக இணைந்துள்ளார்.

## இனிமேல் போர்தான்!

அரசுக்கு எதிராக அடுத்தாண்டு முதல் தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் வெற்றியளித்துள்ள நிலையிலேயே அதனைத் தொடர்வதற்கும், நாடு பூராகவும் போராட்டங்களை விஸ்தரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதீட்டு மீதான விவாதம் நிறைவடைந்த பின்னர் இதற்கான திட்டங்கள் பற்றி எதிரணி விளக்கவுள்ளது.

## சேறு பூசுறாங்கள்!

தெற்கு அரசியல் களம் கொதிநிலையில் உள்ளது. இந்த நிலையில், புத்தளம் அரசியல் களத்திலும் 'மினி' யுத்தமொன்று மூண்டுள்ளது. மொட்டுக் கட்சியின் மூன்று இராஜாங்க அமைச்சர்களுக்கிடையில்தான் இந்த அரசியல் யுத்தம் . இதற்கிடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை வலுப்படுத்தும் முயற்சியும் அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இராஜாங்க அமைச்சர்களான சனத் நிஷாந்த, அருந்திக்க பெர்னாண்டோ மற்றும் பிரியங்கர ஜயரத்ன ஆகிய மூவரும் புத்தளம் மாவட்டத்தை மையப்படுத்தியே அரசியல் நகர்வுகளை முன்னெடுத்துவருகின்றனர். அந்த மாவட்டத்தில் இருந்தே மூவரும் நாடாளுமன்றம் தெரிவாகினர்.

இதனால் மூவருக்கிடையில் அவ்வப்போது முறுகல்கள் இடம்பெறுவது வழமை. ஆனால் தற்போது கடும் மோதல் ஏற்பட்டுள்ளதாகவே அறியமுடிகின்றது. இதற்கு மற்றுமொரு இராஜாங்க அமைச்சரின் நிதி ஒதுக்கீடே காரணம் எனவும் அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வடமேல் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமாரவுக்கு 10 வீதிகளை புனரமைப்பதற்கு, துறைசார் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் நிமல் லான்சா நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார். இதனால் அதிருப்தியடைந்த சனத் நிஷாந்த, இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவை தொடர்புகொண்டு வினவியுள்ளார்.

"இராஜாங்க அமைச்சரே, எனது அபிவிருத்தித் திட்டங்களும் ஆரம்ப நிலையில் உள்ளன. ஆனால் நிதி ஒதுக்கப்படவில்லை. அப்படி இருக்கையில் சுதந்திரக்கட்சி உறுப்பினருக்கு எப்படி ஒதுக்கப்பட்டது?" எனக் கேட்டுள்ளார்.

" இராஜாங்க அமைச்சர்களான அருந்திக்க, பிரியங்கரவின் வேண்டுகோளுக்கமையவே ஒதுக்கப்பட்டது." என நிமல் லான்சா குறிப்பிட்டுள்ளார். இதனையடுத்து அருந்திக்கவை தொடர்புகொண்ட, சனத் நிஷாந்த, சம்பவம் பற்றி கேட்டறிந்துள்ளார்.

" நான் இல்லை, பிரியங்கரவே இதன் பின்னணியில் உள்ளார்." என அருந்திக்க பதிலளித்துள்ளார்.

சனத் நிஷாந்தவை, பிரியங்கர வெளிப்படையாகவே விமர்சித்து வருவதால் அவரிடம் இது பற்றி சனத் எதுவும் வினவவில்லை.

மறுபடியும் நிமல் லான்சாவை தொடர்புகொண்ட அவர்,

" தேர்தல் காலத்திலும் எனக்கு எதிராக எல்லோரும் சேர்ந்து சேறு பூசினீர்கள். இப்போதும் காலைவாரப் பார்க்கின்றீர்கள். இப்படிச் செய்ய வேண்டாம்." என கடுந்தொனியில் குறிப்பிட்டுள்ளார். இந்தப்பிரச்சினை தற்போது மொட்டுக் கட்சியின் தலைமைப்பீடம்வரை சென்றுள்ளது.



## சொல்லியடித்த பஸில்!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான கூட்டணி அரசின் 2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன தீர்மானித்திருந்தன. இதன்படி இவ்விரு கட்சிகளின் தலைவர்களும் (ஹக்கீம், ரிஷாத்) எதிர்த்து வாக்களித்தனர். எனினும், முஸ்லிம் காங்கிரஸின் மூன்று எம்.பிக்கள் ஆதரவாகவும், ஒருவர் வாக்கெடுப்பில் (தௌபீக்) இருந்தும் நழுவியுள்ளார்.

ரிஷாத்தின் கட்சியைச் சேர்ந்த மூன்று எம்.பிக்களும் அரசை ஆதரித்துள்ளனர். புத்தளம் மாவட்டத்தில் இருந்து முஸ்லிம் தேசியக் கூட்டணி சார்பாக தெரிவாகியிருந்தவர் ரிஷாத்தின் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கட்சியின் அரசியல் உயர்பீடங்கள் எடுத்த முடிவையும் மீறி இவர்கள் வாக்களித்துள்ளதால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சமாளிப்பு அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது. தற்போது கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டும் உள்ளனர்.

அரச கூட்டணிக்குள் மோதல் ஏற்பட்டுள்ளதாலும், பஸிலின் கன்னி பட்ஜெட் என்பதாலும் எப்படியாவது மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுவிட வேண்டும் என பஸிலிடம் மொட்டுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்தனர். நிச்சயம் அது நடக்கும் என பஸில் உறுதியளித்திருந்தார். "இது சாத்தியமா?' என அவர்கள் திருப்பிக் கேட்க, நிச்சயம் நடக்கும் என நம்பிக்கையளித்துள்ளார்.

பட்ஜெட் வாக்கெடுப்பு முடிந்தும் பஸிலை சந்தித்த அந்த உறுப்பினர்கள், நீங்கள் உண்மையாலுமே அரசியல் சிங்கம்தான் என பாராட்டியுள்ளனர். அதேவேளை, பாதீட்டு வாக்கெடுப்பில் பங்கேற்காத ஆளுங்கட்சி எம்.பிக்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத காரணங்களால்தான் அவர்கள் பங்கேற்கவில்லை எனவும், விஜயதாச ராஜபக்ச மட்டுமே அதிருப்தியால் புறக்கணித்தார் என்பதும் தெரியவந்துள்ளது.




நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

0773165555



# மௌன மொழி 59 கவிதைகள்



தாயில்லாக் கட்டிதனை இத்
தள்ளாத வயதினிலும் தன்
சேய் போல் அரவணைத்து அகமதில்
தாய்ப் பாசம் பொங்க
தன்னிலை மறந்து கொஞ்சி
மகிழும் அன்புக்கு இவ்வுலகில்
ஈடு இணை ஏதுமில்லையே

**சி.மகாலட்சுமி**, கொக்குவில்

---

உறவாகிய இரு நெஞ்சங்கள்
வேறு உறவிலாத இரு பிஞ்சுகள்
உறைவிடமிலா இரு தென்றல்கள்
எவ் உறவிடம் சென்று தம்
உறைவிடம் பெற்று இனி
ஜீவனம் செய்யுமோ

**பி.காவியா**, யாழ்ப்பாணம்

---

அன்பைக் கொடுத்து பதில்
தென்பைப் பெறும் செயல்
இன்று அருகி விட்டது
இன்பத்துக்குத் துணை போக
ஈ எறும்புகளாலும் முடியும்
ஈரநிலமே பசுமை தரும்
நான் மகான் பிறவியல்ல
என்பவரேயின்று பெரும்பான்மை

**க.நாகராசா**, சாவகச்சேரி

---

தேசம் மீட்பின் வீரர் தாகம்
தீரும் கனவும் நாளை சேரும்
பாசம் மலர்ந்த தனயன் தேகம்
வாசம் வீசும் துயிலும் இல்லம்
காலம் கடந்தும் துயரில் வாடும்
கேசம் நரைத்த கிழவன் உள்ளம்
தாவும் குரங்கை நெஞ்சில் தழுவி
வேகும் மனதும் ஆறுதல் தேடும்

**ச.ரன்குமார்**, வற்றாப்பளை

---

இரவு பகலாய் உன் பாதம் பூமி பட
இமைக்காது வழிமேல் விழி வைத்தேன்
தோள் மேல் உன்னை சுமந்தேன் உன்
தோள் வளர்ந்ததால் என்னை
வெறுத்தாயா மகனே
கண்ணீராற்றும் நீயும் நாளை
கண்கலங்கச் செய்வாயா ....

**கவிஷா பவன்**,கோண்டாவில்

---

அன்பு காட்டிட மானிடர்
விலங்கு வேற்றுமை ஏது.
தயவிழந்து நிற்கும் முதியவர் இங்கே
தாய் வடிவில் இந்த குழந்தைக்கு
கண்களாலே கவிதை பேசிடும்
இவ்விரு இதயங்களும்
இரு மனிதர் காதலை விஞ்சிடுமே .
பெற்ற பிள்ளைகள் தாயையும்,
தாய் தன் பிள்ளைகளையும்
விரட்டிடும் இக்கலியுகம் தனில்
இதுவல்லவோ ஜாதி மதம் கடந்த காதல்

**பானுஜா ஜெயரட்ணராஜா**
திருநெல்வேலி

---

அன்பான அண்ணலே
சிந்தை பால் செல்லாது
மதியுடன் செயற்படுங்கள்
மந்தி மனம் மக்கானால்
கூடா நட்பு கேடானால்
தயாராக வேண்டாமோ
குட்டி குரங்காரின்
குறும்புகளை எதிர்கொள்ள.....

**எஸ்.உமாசிவம்**, வவுனியா

---

**மடி ஏந்தி வளர்த்ததெல்லாம்**
**குடி பெயர்ந்து சென்றதனால்**
**மரம் இறங்கி வந்த உன்னை**
**அரவணைத்து துயர் மறந்தேன்**

**எஸ்.ஸ்ரீ**, மீசாலை

---

**பரிசு பெறும் கவிதை**

**கண்ணாக வளர்த்ததொன்று**
**கண்கலங்க விட்ட தென்று**
**கள்ளமில்லா ஐந்தறிவு**
**கண் துடைத்து வென்றதிங்கே**

**எஸ்.குகா**, கட்டுவன்

---

மங்கியிலிருந்து மனிதனா ?
மனிதனிலிருந்து மங்கியா?
நீயும் நானும் வேறல்லவே!
நீ என் பிள்ளை ஆம் !
நான் உன் பிள்ளையே!
என் கண்ணு தூங்கடா!

**கே.எஸ்.சிவஞானராஜா**

---

அன்று இல்லறம் நல்லறம் காண
மனை மக்கள் மனைவியெனும்
சுமை தனை தூக்கி சுமந்தார்
சுகமாய் எண்ணி
வளப்படுத்தி வாழ வைக்க
உடல் வருத்தி உழைத்தவர்
இன்று வலுவிழந்து வாடியிருக்க
தத்தெடுத்த முத்துராமு மட்டும்
விழிநீர் துடைத்து விடும்
உன்னத அன்பு இதுவே

**வி.பி.சிவேஸ்**

---

அன்புக்கும் பாசத்துக்கும் ஏங்கும்
இரண்டு உள்ளங்கள் கொஞ்சி
விளையாட இனமொரு கோடா
ஆகட்டும் நம் இனத்தின்
மூதாதையரின் நற்பண்பு
அழியட்டும் ஆணவமும் அகங்காரமும்

**கு.யோபி**, நல்லூர்

---

தாய்க்கு வரும் பெற்ற பாசம்
தந்தைக்கு வரும் வளர்த்த பாசம்
யாருக்கும் வரும் குழந்தைப் பாசம்
எந்தக் குழந்தையின் குறும்புப் பாசம்
குரங்குக் குட்டியும் நம்ம இனம் தானே

**கௌதம்**, திருநெல்வேலி

---

துக்கத்தில் கதறி
அழுதிடும் தன்
எஜமானின் கண்களைத்
துடைத்து விடும்
ஐந்தறிவு ஜீவனே!
என்றும் மாசற்ற
உன் அன்பின் முன்னே
உலகில் தோற்று
நிற்கிறது சுயநல மனிதம்

**சு.ஜெயரூபன்**,
பருத்தித்துறை

---

கவிதைக்கு பரிசு 1000/=

60

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**

**03.12.2021**

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555



# வெளியுறவுக்கொள்கை...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

அவ்வாறு பொதுவான ஒரு வெளியுறவு அணுகுமுறைக்கு ஒரு பொதுவான வெளியுறவுக் கொள்கை அவசியம். ஒரு பொதுவான வெளியுறவு கட்டமைப்பு அவசியம்.

அவ்வாறான பொருத்தமான வெளியுறவுக் கட்டமைப்பு இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் தமிழ்க்கட்சிகள் மத்தியில் மூன்று வேறு போக்குகள் காணப்படுகின்றன.

அமெரிக்க விஜயத்தின்பின் கனடாவில் உரை நிகழ்த்திய சுமந்திரன் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க சந்திப்புகளின் பின் அங்கே என்ன பேசப்பட்டன என்பவற்றை வொஷிங்டனில் உள்ள இந்திய தூதுவருக்கும் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.வுக்கான இந்திய பிரதிநிதிக்கும் தான் எடுத்துரைத்ததாக சுமந்திரன் கனடாவில் வைத்து கூறியுள்ளார்.

நோர்வேயின் சிறப்புத் தூதுவர் சொல்ஹெய்ம் வன்னியில் என்ன பேசப்பட்டது என்பதை ஒவ்வொரு முறையும் இந்தியாவுக்கு 'அப்டேட்' செய்ததும் சுமந்திரன் அமெரிக்க விஜயத்தில் பேசப்பட்டவற்றை இந்தியாவுக்கு அப்டேட் செய்வதும் ஒன்றல்ல. ஏனென்றால் சொல்ஹெய்ம் ஒரு ராஜதந்திரி;அனுசரணையாளர்;விஷேடதூதுவர். ஆனால் சுமந்திரன் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பின் பிரதிநிதி. அவர் தனது மக்களின் நோக்கு நிலையில் இருந்து ஒரு வெளியுறவுக் கொள்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியவர். ஆனால் அப்படி ஒரு பொதுவான வெளியுறவுக் கொள்கை ஏதும் தமிழ் கட்சிகள் மத்தியில் கிடையாது. குறைந்த பட்சம் அமெரிக்க விஜயத்துக்கு முன்பு தமிழரசுக்கட்சியின் உயர்மட்டத்திலோ அல்லது கூட்டமைப்பின் உயர்மட்டத்திலோ அதுதொடர்பாகக் கலந்துரையாடப்படவில்லை. ஒரு பொது முடிவு எடுக்கப்படவில்லை.

மாறாக சிறிய பங்காளிக் கட்சியின் முன்னெடுப்பு ஒன்றை வெட்டியோடும் முனைப்பே தெரிகிறது. இவை வெளிவிவகார நோக்கு நிலையிலிருந்து தீர்மானிக்கப்பட்ட தந்திரோபாய ஓட்டங்கள் அல்ல. மாறாக நான் பெரிதா நீ பெரிதா என்ற அகந்தையின் பாற்பட்ட ஓட்டங்களாகவே தெரிகின்றன. இந்த அகந்தை காரணமாக மூலோபாய நோக்கு நிலையிலிருந்து முடிவெடுக்கப்பட வேண்டிய ஒரு விவகாரம் தமிழ் மக்களுக்கு படங்காட்டும் ஒரு விவகாரமாக குறுக்கப்பட்டு விட்டதா? சீனா ஒரு பிராந்திய பேரரசு என்ற நிலையிலிருந்து பூகோளப் பேரரசு என்ற ஒரு வளர்ச்சியை நோக்கிப் போக முற்பட்டதன் பின்னணியில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒன்று மற்றதில் தங்கியிருக்கும் பூகோளப் பங்காளிகளாக மாறிவிட்டன. சீனாவை எதிர்கொள்வதற்கு இந்தப்பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கு , இந்தியா தேவை. அதேபோல உலக அளவில் இந்தியாவுக்கும் அமெரிக்கா தேவை. கொவிட்-19 சூழலானது இந்தத்துருவமயப்படலை கூர்மைப்படுத்தியிருக்கிறது. எனவே அமெரிக்காவை எப்படித்தான் கெட்டித்தனமாகக் கையாண்டாலும் இறுதியிலும் இறுதியாக அமெரிக்கா இந்தியாவிடந்தான் கொண்டு போய்விடும் என்பதுதான் இப்போதுள்ள புவிசார் அரசியல் யதார்த்தமாகும்.

ஆனால் இந்தப்பூகோளப் பங்காளிகளை கூட்டமைப்பின் இரு வேறு தரப்புக்கள் தனித்தனியாக அணுகுவதே இதிலுள்ள வேடிக்கையான ஒரு விடயமாகும். சுமந்திரனின் குழு அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சந்திப்புகளை முன்னெடுக்கும் அதே காலப்பகுதியில் ரெலோ அமைப்பு கொழும்பிலுள்ள மேற்கத்திய தூதுவர்களை சந்தித்து வருகிறது.

இந்தச்சந்திப்புகள் கூட்டமைப்பின் சந்திப்புக்களாக செய்திகளில் சித்தரிக்கப்படுகின்றன. ஒரு சிறியதீவில் ஒரு சிறிய மக்கள்கூட்[illegible]க்கின் மொத்தம் 13 பிரதிநிதிகள் அவர்களுடைய வெளிவிவகார அணுகுமுறைகளில் கூட ஒற்று[illegible] இல்லை. தமிழ்க்கட்சிகள் இறந்த காலத்திலிருந்து எதையுமே கற்றுக் கொள்ளவில்லை.

○ கருணை ரவி

**அந்தக் கடற்கரைக்கு எத்தனையோ பெண்கள் வருவார்கள். மரியதாஸின் மகள், பேதுருவின் மகள், அந்தோனியின் மகள், ஆனால், எவரும் கந்தவிக் கிழவனின் மகளைப்போல வருவதில்லை. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு சட்டை. சட்டைக்கேற்ற தோடு, கால் சலங்கை. காற்றுக்கு கன்ன மயிர் பறக்கும் அழகு. இவைகள்தான் மரியதாஸை மயங்க வைத்திருக்கவேண்டும்.**



சஞ்சீவி தொடர் கதை

4

# மாணத்தி



சஞ்சீவி தொடர் **கதை**

கந்தவிக்கிழவன் தனிப்பனைக்கள்ளு ஒரு போத்தல் குடித்தார். ஆனால், ஐந்து போத்தல் குடித்தவர் மாதிரி உலாஞ்சிக் கொண்டு நடந்தார். இன்றுதான் இப்படி. இதற்கு முன்பு என்றால், இரண்டு போத்தல் கள்ளும் ஒரு பியர் ரின்னும் குடித்துவிட்டு நடந்தார் என்றால் வெறி என்று எவரும் சொல்லமாட்டார்கள். நடையிலும் கதையிலும் நிதானம் இருக்கும். ஆனால், இன்று பெருங்குடிகாரன் மாதிரி தளம்பல் நடையோடு போனார்.

அவர் காலையில் சாப்பிடவில்லை. வள்ளிநாயகி கொடுத்த ஒரு மூக்குப்பேணி தேநீரோடு இருந்தார். மகள் சாப்பாடும் கொண்டு வரவில்லை. அவள் வெள்ளிக்கிழமைகளில் சாப்பாடு கொண்டுவர மாட்டாள். வீடு கழுவி, முற்றத்துக்கு சாணித் தண்ணி தெளித்து. மச்சப் பானை சட்டிகளை கழுவி தென்னைக்கு கீழே இருக்கும் வரிச்சு மட்டைக்கு மேல் காயவைக்கவே பத்து மணியாகிவிடும்.

வெள்ளிக்கிழமைகளில் மட்டும் திரவியத்தின் பெட்டிக்கடையில் இரண்டு றொட்டி சாப்பிடுவார். ஆனால், இன்று அவர் றொட்டி சாப்பிடவில்லை. சாப்பிட மறக்கவில்லை. கனகம் காலையில் சொன்ன கதை பசியைத் தொலைத்தது. மரியதாஸ் அவரில் ஒரு மயிர் கொட்டியானான். வள்ளிநாயகி காலையில் கடற்கரைக்கு வரும்போது தூக்குச்சட்டியில் சாப்பாடு கொண்டு வந்து கட்டுமரத்துக்குள் வைத்து வலையால் மூடிவிடுவாள். மரியதாஸ் அதை எடுத்துச் சாப்பிடுவான். பொழுதுபட அந்தோனி வலையைக் கட்டுமரத்தில் ஏற்றிவிட்டு கடற்கரை தென்னை மரத்துக்குக் கீழே படுக்க, மரியதாஸ் பக்கத்தில் படுப்பான். அந்தோனி குறட்டை விட, மரியதாஸ் எழும்பி அந்தோனி வீட்டுக்குப் போவான்.

மரியதாஸின் இப்படியான எத்தனையோ கதைகள் அவருக்குத் தெரியும். ஆனால், எதையும் கண்டும் காணாததுமாக நடப்பார். எதையும் எவருக்கும் சொல்லமாட்டார். ஆனால் அவருக்கு மகளின் இந்தக்கதை மனதில் பெருத்துக்கொண்டிருந்தது. அந்தக் கடற்கரைக்கு எத்தனையோ பெண்கள் வருவார்கள். மரியதாஸின் மகள், பேதுருவின் மகள், அந்தோனியின் மகள், ஆனால், எவரும் கந்தவிக்கிழவனின் மகளைப்போல வருவதில்லை. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு சட்டை. சட்டைக்கேற்ற தோடு, கால் சலங்கை. காற்றுக்கு கன்ன மயிர் பறக்கும் அழகு. இவைகள்தான் மரியதாஸை மயங்க வைத்திருக்கவேண்டும்.

'குமருகள் வீட்டில் இருக்க வேண்டும். வெளியில் வந்தால் இப்படியான சோலிகள் வீடு தேடிவரும்'என நினைத்துக்கொண்டு நடந்தார். கால்கள் நேராகப் போகவில்லை. வெறும் வயிற்றில் இறங்கிய தனிப்பனைக்கள்ளுக்கு இருக்கும் 'பவறை' இன்று கிழவன் உணர்ந்தார்.

"பூறாட்டியேன் சிரித்தான்? பூறாட்டியின் சிரிப்பில் ஏன் மரியதாஸ் சந்தேகமடைந்தான்? அவன் யாரைப் பார்த்தாலும் சிரிப்பான். அந்தச்சிரிப்பில் என்ன வஞ்சகத்தை மரியதாஸ் கண்டான்? பூறாட்டி இன்று கடற்கரைக்கு வரவில்லை. மரியதாஸ் வரக்கூடாது என்று சொன்னானா? பூறாட்டி பயந்தவன். யாரும் வெருட்டினால் அழுவான். மரியதாஸ் கட்டுமரத்து மறைவில் அடிக்க, பூறாட்டி கத்தியிருப்பான்" பூறாட்டி மேல் கிழவனுக்கு இரக்கம் பிறந்தது.

கிழவன் நடந்து செல்லச்செல்ல மரியதாஸினதும் பூறாட்டியினதும் நினைவு கிளர்ந்தபடியே இருந்தது. நங்கூரமிடப் படாத படகு மாதிரி மனம் தத்தளித்துக்கொண்டிருக்க வயிறு குமட்டிக்கொண்டு வந்தது. வெறும் வயிற்றில் இறங்கிய கள்ளு, வாய்க்கு வெளியில் வருவது மாதிரி இருந்தது. அவரை அறியாமல் பெரிய ஏவறை ஒன்று அடிவயிற்றிலிருந்துவரவேலிக்கரையில் இருந்த அணில் கீச்சிட்டுக்கொண்டோடியது. அந்த ஏவறையின் மணத்தை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. மூன்று நாள் போத்தலுக்குள் கிடந்து புளிச்ச கள்ளின் மணமாய் நாசில் வந்தபடி இருந்தது. ஐந்தாறு தடவைகள் காறித்துப்பினார். சளி மஞ்சளாய் மணலில் விழுந்தது.

முகம் வியர்த்தது. நெஞ்சு குளிர்ந்து வர, தோளில் இருந்த துவாயால் முகத்துக்கும் நெஞ்சுக்கும் விசுக்கினார்.

" உவாக்"

பெரிய ஓங்காளத்துடன் சத்தி வந்தது. வயிற்றில் இருந்த கள்ளு முழுவதும் வெளியில் வந்தது. சத்தியில் மஞ்சள் மஞ்சளாய் கள்ளுடன் தின்ற மிக்சரும் கறிவேப்பிலைத் துண்டும் உறைந்து கிடந்தன. சத்தி எடுத்து முடிந்ததும் வயிறு இதமாக இருந்தது.

சத்தியைச் சுற்றி இலையான்கள் மொய்த்தன. காலால் மண்ணை தட்டி சத்தியை மூடினார். கடைவாயிலும் மீசையிலும் ஒட்டிக் கிடந்த சத்தித் துணுக்குளை துவாயால் துடைத்துக்கொண்டு வீட்டுக் கேற்றைத் திறக்க, பூறாட்டி வீட்டுக்குள்ளிருந்து வெளியில் வந்தான்.

(வருவாள்)



எஸ்.பி.தனா, தெல்லிப்பழை

## விபரீத முடிவு

மன உடைவு ஏற்பட்டால் கலக்கமடையாதே
கஸ்ர நிலை ஏற்படலாம் நம்பிக்கை வேண்டுமே
இளவயதில் எத்தனை சோதனைகள் வந்தாலுமே
உயிரை மாய்க்க ஏன் தான் நினைக்கின்றாயோ

உன்னைப் படைத்த கடவுளை மறந்துவிடாதே
வீணான சிந்தனைகள்
விபரீத முடிவைக் கொடுக்குமே
விதியை மதியால் வெல்ல முடியுமல்லவா

கடவுள் தந்த வாழ்வை மனிதன் அழிப்பதா
தவறான முடிவு எடுப்பது தவறல்லவா
உறவென்று சொல்ல யாரும் இல்லையா
வாழும் வயதில் வாழ்க்கையை தொலைக்கலாமா

சவால்களை எதிர்கொள்ள மனத்திடன் வேணுமே
வாழ்ந்து காட்டனும் சவால்களை எதிர்கொண்டு
காதலில் தோல்வியா கலக்கமடைய வேண்டாமே
கல்வியில் பின்னடைவென்றால் புரட்டிப் பார்






நாடு வேண்டும்
நாம் வாழ
நல்ல வீடு
எமக்கு வேண்டும்.

படை வேண்டும்.
நாடு காக்க
நாகம் போல
வீரர் வேண்டும்.

தலைவன் வேண்டும்.
சோர்ந்த போதும்
சோராது நிற்கும்
தீரத்தோடு வேண்டும்.


ஆசிரியர் வேண்டும்.
வலிகள் கடந்து
வழிகள் ஆக்கும்
ஆற்றலோடு வேண்டும்.

மாற்றம் வேண்டும்.
சருகில் இருந்து
பசுமை பெறும்
முயற்சியோடு வேண்டும்.

சந்ததி வேண்டும்.
இயல்பு மாறாத
சுயமாக நடந்திடும்
சிந்தையோடு வேண்டும்.

எல்லாம் வேண்டும்.
நாம் தமிழர்
என்ற உணர்வு
மாறாத நாடு வேண்டும்.

- நதுநசி



1505–1948 வரை

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

இதுவரை யாழ்ப்பாணப்பட்டினம் பற்றிய பூரண விளக்கத்தை உங்களுக்குத் தந்துள்ளேன்; இனி திருகோணமலை பற்றி பார்ப்போம். 1639 ஆம் ஆண்டு 50 பேர் கொண்ட அந்தோனி கான் (Anthony Cann) தலைமையிலான படையினரால் கைப்பற்றப்பட்டது. இங்கு ஒரு அழகிய துறைமுகம் உள்ளது. இலங்கையிலுள்ள ஏனைய துறைமுகங்களை விட காலி ,கொழும்பு போன்றவற்றை விட இங்கு கப்பல்களை பாதுகாப்பாக நிறுத்தலாம். இந்தப்பிரதேசம் பல தடவைகள் எம்மால் புனரமைக்கப் பட்டது, குறிப்பாக ஆங்கிலேயர்களுடனான போரின் போது. ஒரு சிறந்த துறைமுகத்தை இலகுவில் விட்டுவிட முடியாது. வெளிநாட்டுத் தொடர்புகளுக்கும் ராஜசிங்கனுடனான தொடர்புகளுக்கும் இந்தத் துறைமுகம் உதவும். இந்தத் துறைமுகப் புனரமைப்பின் போது சுவருக்கு வர்ணம் பூசும் போது பலர் கடலுக்குள் வீழ்ந்து இறந்துள்ளனர். இறுதியாக 1667 ஆம் ஆண்டு கப்டன் பீட்டர் டு பொன்ஸ் (Petr du Pons)காலத்தில் பூர்த்தி யாக்கப்பட்டது. இந்த துறை முகத்துக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குமாறும் நான்கு படையணிகளை(bastion) நிறுவுமாறும் உத்தரவிட்டுள்ளேன். திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு வருவதாயின் மட்டக்களப்பு ஊடாகத்தான் வர வேண்டும். மட்டக்களப்புதான் இலங்கையில் நாங்கள் முதல் முதலில் கைப்பற்றிய பிரதேசம். கண்டி அரசன் ராஜசிங்கனுடன் சமாதானமாக இருந்து வருகிறோம். ராஜசிங்கனுக்கு வயதாகி விட்டது; ராஜசிங்கன் ஒரு குடிகாரன்.

(இத்துடன் பால்டயஸ் அடிகளாரின் குறிப்புகள் நிறைவுற்றன)

### ஒல்லாந்தர் நிர்வாகம்

இலங்கை முழுவதற்குமான (கண்டி இராச்சியம் தவிர்ந்த) ஒல்லாந்த தேசாதிபதி கொழும்பிலிருந்தார். இவரின் கீழ் யாழ்ப்பாணத்திலும் காலியிலும் இரு தளபதிகளிருந்தனர்.

யாழ்ப்பாணத் தளபதிக்கு காலித்தளபதியை விட கூடுதலான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. கொழும்பிலிருந்த தளபதி விடுமுறையில் செல்லும் காலங்களில் யாழ்ப்பாணத் தளபதியே தேசாதிபதியின் கடமைகளையும் பொறுப்பேற்றிருந்தார். ஒல்லாந்தத் தளபதியின் கீழ் ஒரு ஒல்லாந்த அதிகாரியும் அவருக்கு உதவியாக இன்னொரு அதிகாரியும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் 'Onder Koopman' 'opper koopman' எனஅழைக்கப்பட்டனர். இவர்களின் கீழ் உள்ளூர் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

போர்த்துக்கீசரைப்போலவே ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை நான்கு பிரிவுகளாகவும் 32 கோயிற்பற்றுகளாகவும் பிரித்து ஆட்சி செய்தனர்.நான்கு பிரிவுகளுக்கும் நான்கு முதலியார்கள் நிய மிக்கப்பட்டனர். திருகோண மலை, மட்டக்களப்பு, மன்னார் போன்ற பகுதிகளும் யாழ்ப்பாணத் தளபதியின் கீழ் இருந்தன. இந்த மூன்று மாவட்டங்களுக்கும் தனித்தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்த னர். டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத் தீவுகளுக்கு ஒல்லாந்த நகரங்களின் பெயர்கள் சூட்டப்பட்டன. இந்த பெயர்கள் இன்று வரை நிலைத்திருக்கின்றன. ஒல்லாந்தர் யாழ்ப்பாண தீவுகளுக்கு சூட்டிய பெயர்கள் வருமாறு–

| | |
|---|---|
| ஊர்காவற்றுறை | Kayts |
| புங்குடுதீவு | Middleberg |
| அனலைதீவு | Rotterdam |
| நயினாதீவு | Haarlem |
| நெடுந்தீவு | Delft |
| வேலணை | Leyden |
| இரணைதீவு | Hoon, orEnkuysen |
| காரைநகர் | Amstedam |

### ஒல்லாந்த அதிகாரியின் கடமைகள்

கோட்டைக்கு வெளியே உள்ள படையினர் மீதான அதிகாரம், வீதிகள் செப்பனிடல், விவசாய அபிவிருத்தி, காலையும் மாலையும் பிரசாங்கத்துக்கு ஏற்பாடு செய்தல்,சந்தை மேற்பார்வை,வரி அறவிடல்.

### முதலியாரின் கடமைகள்

தனது பிரதேசத்தில் நடக்கும் விடயங்களைப்பற்றி அறிக்கையிடுவது, தனது பிரதேசத்தில் செய்ய வேண்டிய வேலைகளை செய்விப்பது.

### கத்தோலிக்க வழிபாட்டுக்குத் தடை

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுவோருக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என அறிவித்தனர். கத்தோலிக்கத் திருமணங்களுக்கு கடுமையான வரி விதிக்கப்பட்டது .

கத்தோலிக்க குருமாரால் நிறைவேற்றப்படும் திருமணங்கள் தடை செய்யப்பட்டன. கத்தோலிக்கர் பிள்ளை பெற்றால், பெற்றோர் அரச அடிமைகளாகக் கருதப்பட்டனர். மயானங்களில் கத்தோலிக்கரின் சடலங்களைப் புதைப்பதற்கு தடை விதிக்கப்பட்டது அல்லது பெருந்தொகைப்பணம் அறவிடப்பட்டது.

### பப்டிஸ்ட் மத பிரசாரம்

கத்தோலிக்க தேவாலயங்கள் இருந்த இடங்களில் அவற்றை அழித்து விட்டு புரட்டாஸ்தாந்து தேவாலயங்களை அமைத்தனர் ஒல்லாந்தர்.

ஆரம்பத்தில் மதமாற்றத்தை வலியுறுத்தாத ஒல்லாந்தர் காலப்போக்கில் மக்கள் தமது சைவ ஆசாரங்களை கை விட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயங்களுக்குச்செல்ல வேண்டுமென உத்தரவிட்டனர். மதத்தைப் பரப்புவது ஒன்றும் அவர்களுக்கு கடினமாக இருக்கவில்லை.

திருச்சபையினர் கிராமங்களுக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் திருச்சபையினர் வரப்போகிறார்கள் என்ற விடயம் பறை மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும். மக்கள் கிராமத்தில் உள்ள புளிய மரத்தின் கீழ் ஒன்று கூடுவர் போர்த்துக்கீசரும் உள்ளூர்வாசிகளும் கூடியதும் திருச்சபைக்குரு தமிழில் சொற்பொழிவாற்றுவார்.

இது ஓர் உத்தியோகபூர்வ நிகழ்வாகவே இருக்கும் குருவானவரின் உரை மனனம் செய்யப்பட்டதாகவே இருக்கும். சொற்பொழிவின் முடிவில் கேள்வி ஒன்று கேட்கப்படும். உங்களது கடவுள் உண்மையான கடவுள் இல்லையென்றால் உண்மையான கடவுளை ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதே கேள்வி. ■

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்

'காமிக்ஸ் தொடர்'


அரிமாநேத்ரன்

## துப்பறியும் AK67 02



# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 09 . 1940 — மறைவு 26 . 11 . 2021



## செல்லப்பா சுந்தரலிங்கம்

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா செல்லம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களாகிய சின்னத்துரை அன்னம்மா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா இராசதுரை ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் கமலநாயகி ஆகியோரின் அன்பு மைத்து னரும், பிரசாந்தி, வசந்தகுமார், சுவேந்தினி, கோசலா, சங்கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரன், இந்திரகுமார், ஜெயமோகன் ஆகியோரின் மாமாவும், சியாம், யாதவன், கஜானன், டானிஷா, ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மடத்தடி,
சிறுப்பிட்டி வடக்கு.

தகவல்
வசந்தகுமார் (மகன்)
077 600 6712

(CS 695) (3/6)

# போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்ளும் இந்திராபுரம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தற்போது பெய்துவரும் தொடர் மழையால் பளை, வேம்பொடு கேணி, இந்திராபுரம் கிராமத் துக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அங்கு மக்கள் மீளக்குடி யமர்ந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள் ளன. ரயில் தண்டவாளத்தைக்கடந்து, கிராமத்துக் குச் செல்வதற்கான கடவை இது வரை அமைக்கப்படவில்லை. அதனால் வாகனங்களில் வருவோர், வேம்பொடு கேணி மற் றும் முகமாலை ஊடான தற்கா லிகப் பாதை களையே பயன்படுத்து கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழையால் பல இடங்களில் வெள்ளம் தேங்கி, வாகனங் கள் பயணிக்க முடியாத நிலைமை காணப் படுகின்றது. வெதுப்பக வியாபாரிகள்கூட, கிராமத்துக் குள் வர முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

வேம்பொடுகேணி ஊடாக வரும் தார் வீதி கனரக வாகனங்களின் பாவனையால் பல இடங்களில் சேதமடைந்துள்ளது. முக மாலை ஊடாகப் பயணிக்கும் தற்காலிக மணல் பாதையிலும் பல இடங்களில் வெள் ளம் தேங்கியிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிராம மக்களின் அவல நிலையை நேரில் வந்து பார்வை யிட்டு, தண்டவாளம் ஊடாக மக்களும், வாகனங்களும் பயணிக்கக்கூடிய கட வையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

[redacted]

[redacted]


**தேவை**

TATA வட்டா, TATA Picup ஆட்டோ உடன் தேவை.

077 4458 886, 076 9649 344 (CS 705) (1/6)


# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 09 . 1942 — மறைவு 26 . 11 . 2021



## திருமதி திருநாவுக்கரசு மகேஸ்வரி

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும். நோர்வே. பிரித்தானியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி திருநாவுக்கரசு அவர்கள் 26-11-2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் உத்தமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கதிரவேலு தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற திருநாவுக்கரசு (VKT) அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி. இராஜரட்ணம் மற்றும் சாம்பசிவம். நல்லம்மா. தேவராஜா. சொர்ணலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும்.திருச்சாந்தி (பிரித்தானியா). திருச்சிவம்(பிரித்தானியா). திருக்குமார் (கனடா). திருஞானம் (பிரித்தானியா). திருச்செல்வி(பிரித்தானியா). திருக்கேதீஸ்வரன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்.தேவபாலன் (பிரித்தானியா). இரஞ்சிதவதனி (பிரித்தானியா). சுதர்விழி (கனடா). அருள்செல்வி (பிரித்தானியா). அற்புதராஜா (பிரித்தானியா). தவராஜினி(பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமியாரும். யதுர்சன். யட்சன். கவின். கவிதா. கபில். திமோற்றி. தனிஷா. தனிக்கா. திகர்ணன். தியாணி. அஜேன். டெசியா. திசோக். திவ்யன். தஜினி ஆகியோரின் பாசமிகு பேரத்தியும். சயன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு

தகவல்:
குடும்பத்தினர்

(CS 41312) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 04 . 1940 — மறைவு 27 . 11 . 2021



## பொன்னையா தெட்சணாமூர்த்தி

சிவன்வீதி, ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தெட்சணாமூர்த்தி நேற்று (27.11.2021) சனிக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற கந்தப்பிள்ளை கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், பத்மினியின் அன்புத் தந்தையும், குணசேகரம் அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கந்தசாமி (ஆசிரியர்), சிவபாதம், திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, இன்பராணி, செல்வரத்தினம், தங்கராசா, யோகராசா, சௌந்தேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, ஆவரங்கால்,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 660 1929

(CR 5531) 1-6

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 03 . 1974 — இறப்பு 25 . 11 . 2021



## திருமதி குகன் கலாவாணி (வாணி)

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குகன் கலாவாணி (வாணி) அவர்கள் கடந்த (25.11.2021) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன் கலாநிதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான அற்புதநாதன் மகேஸ்வரி தம்பதியினரின் பாச மிகு மருமகளும், காலஞ்சென்ற குகன் அவர்களின் அன்பு மனைவியும், சுஜாணன் (மாணவன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு தாயாரும், ஜெயகாந்தன் (T.O, நகரசபை, பருத்திதுறை), கலையரசி, கலைச்செல்வி, தயாபரன் (T.O, RDA- பருத்தித்துறை), தினேஸ்குமார் (Wildlife Department) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாமலோஜினி (RDHS), பாலகிருஷ்ணன் காலஞ்சென்ற விமலராசன், மற்றும் சுஜிதா, ஜெகதீசன், ரமேஸ்வரன் (C.T.B), ஜெகாஜினி (ஆசிரியை வ/றம்பைக் குளம் ம.வி), அஜந்தா (தாதிய உத்தியோகத்தர், பூநகரி பொது வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனியும், அக்சன், பிரஜித், மதுமிரா, லிர்த்திகா, லிபிக்ஷன் ஆகியோரின் அத்தையும், அபிஷனா, கௌசிகன், நிருசனா ஆகியோரின் பெரியம்மாவும், அருந்தவநேசன், கருணாநிதி, வைத்திநாதன் - ஆனந்தநிதி தம்பதியினரின் மகளும், நவஜீவன், சங்கீதா, றஜீவிதன், கஸ்தூரி, தராகுலன் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை மு... மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
0775561605

தகவல்:
சகோதரன்
பரமேஸ்வரன் ஜெயகாந்தன்

(CR 5529) 1-6

## மணமகள் தேவை

யாழ். ஆதி சைவக் குருமார் 1985 இல் அனுச நட்சத்திரத்தில் பிறந்த மா நிறம் 5 அடி உயரமான, க.பொ.த (உ.த) படித்த இலங்கைப் பிரஜையான பிரான்சில் வதிந்து வேலை செய்யும் மணமகனுக்கு, சைவபோசன, அல்லது சைவபோசனமாக வாழக்கூடிய உயர்கல்வி கற்பதற்கான தகுதியுள்ள 1993 - 1986 ற் கிடையில் உயர் குலத்தில் பிறந்த பிரான்சில் சென்று வாழக்கூடிய அழகிய மணப்பெண்ணை எதிர்பார்க்கிறோம்.

தொடர்பு :077 959 3393 (CS 41302) (3/6)

## வேலையாட்கள் தேவை

எமது மரத்தளபாட நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

1. தச்சு வேலையாட்கள்
2. வாகன சாரதி
3. வேலை பழக விரும்புபவர்கள்

தகுந்த சம்பளமும் நிரந்தரமான வேலையும் வழங்கப்படும். தங்குமிட வசதியும் உண்டு.

**ஆர்க் தளபாட நிலையம்**
**இல.35, கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.(பஸ் டிப்போ அருகாமை)**
**T.P: 077 300 1763, 021 221 9909**
(CS 700) 1-6

## VACANCY FOR TECHNICAL SUPPORT



If anyone interested to work as a technical support at Oyslans Pvt.Ltd Jaffna, please apply and don't miss this great opportunity. It's for Night shift.

- Allowance for fluent of English
- Night allowance
- Free accommodation

Looking for girls over 19 with IT knowledge…!

Inetersted candidates are rquested to forward their resume to Email:
**mahakajangeo@gmail.com**
**kazmeraa@oyslans.co.uk**
Contact No: 070 6232 432
(CS 698) 1-6

## பணிப்பெண் தேவை

சிறிய வைத்திய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. **077 298 7506** (CS 703) (1/6)

## வாடகைக்கு

யாழ் பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதி. இரு கடைகளும், யாழ் பஸ்தரிப்பிடத்திற்கு பின்னால் மின்சாரசபை வீதியில் இருகடைகளும் வாடகைக்கு உண்டு. (CR 5530 B) 1-6

**0777 232535**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள வீடொன்றில் தங்கிநின்று வீட்டு வேலைகள் செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. (CS 702) 1-6

தொடர்பு: 077 0250 339

## வேலை ஆட்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பண்ணைக்கு வேலை ஆட்கள் தேவை. (சிறு குடும்பத்தினர். விரும்பத்தக்கது). (CS 697) 1-6

தொடர்பு:077 0740 351

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் உள்ள தனியார் பார்சல் நிறுவனத்திற்கு (உள்ளூர், வெளிநாடு) வேலையாட்கள் தேவை. (உணவு, தங்குமிட வசதி உண்டு) தொடர்புகளுக்கு:

**076 935 4332** (CR 5532) 1-6

## விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்பு காணியும், 4 பரப்புக் காணியும் யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 6 பரப்பு காணியும். 4 பரப்புக் காணியும், யாழ் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் கோயில் வீதியில் 6 பரப்பு காணியும் 4 பரப்புக் காணியும், யாழ் ஆனைப்பந்தி சந்திக்கு அண்மையில் 6 பரப்பு காணியும் 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

**0777 232 535**


# மாமூலைக் கிராமத்தில் வீதியை மேவும் வெள்ளம்

## பொதுமக்கள் விசனம்



வண்ணேரிக்குளம், நவ.28

முல்லைத்தீவு, மா மூலைக் கிராமத்தில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துச் செய்வது கடினமாக இருக்கின்றது என பொதுமக்கள் தெரிவித்தனர்.

வீதி அமைக்கப்பட்டபோது, வீதியை உயர்த்தி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தபோதும், அதைக் கருத்தில் கொள்ளாததால் தற்போது வீதியை மேவி வெள்ளம் பாய்கின்றது என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த வீதி அமைக்கப்பட்ட போது வீதியை உயர்த்துவதுடன், மதகுகள் அமைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தோம். மக்களின் கருத்துக்களைக் கேட்காமல் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டத்தால் தற்போது போக்குவரத்துச்செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் தீர்வு வழங்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

# மண் சரிவில் சிக்கி பெண் சாவு!

கொழும்பு, நவ.28

கண்டி அங்கும்புற பிரிவுக்குட்பட்ட ரம்புகேவெல பிரதேசத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக மண்மேடு சரிந்து வீழ்ந்து பெண் ஒருவர் உயிரிழந்தார்.

வீடொன்றின்மீது மண் சரிவு ஏற்பட்டது என்றும் அந்தச் சந்தர்ப்பத்தில் வீட்டுக்குள் கணவன், மனைவி மற்றும் மகள் ஆகியோர் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மூவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், (வயது-50) பெண் உயிரிழந்தார். அவரது கணவரும், மகளும் தொடர்ந்து சிகிச்சை பெறுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




இன்னல்களுக்கும் மத்தியில் சாதித்துக்காட்டிய

**செல்வி கணேஸ்வரன் சங்கீதா**
**(மருத்துவ பீட மாணவி பேராதனை பல்கலைக்கழகம்)**

கணேஸ்வரன் சித்திராதேவி தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக 2000 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் பிறந்தார் சங்கீதா இவரின் பெற்றோர்கள் வாதரவத்தை, புத்தூர் கிழக்கினை வசிப்பிடமாக வசித்து வந்த காலப்பகுதியில். 1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் காரணமாக இடம்பெயர்ந்து D4, மருதநகர், கிளிநொச்சியில் வசித்துவந்தனர்.

போர்க்கால சூழ்நிலையிலும், வறுமையினையும் பொருட்படுத்தாது தனது மூன்று பெண் பிள்ளைகளையும் வளர்த்து ஆரம்பக் கல்வியினை புனித திரேசா பெண்கள் கல்லூரியில் கற்றுவந்த காலப்பகுதியில் 2009 ஆம் ஆண்டு போர் காரணமாக மீண்டும் இடம்பெயர்ந்து உடையார்கட்டு பிரதேசத்தில் வசித்துவந்தனர்.

இக்காலப் பகுதியில் போர் உக்கிரமடைந்த நேரத்தில் எறிகணைத் தாக்குதலில் சங்கீதாவின் தாயும், அக்காவாகிய பிரியங்காவும் 2009.02.06 ம் நாள் சாவடைந்தனர். தங்கையாகி சயனிகா தலையில் படுகாயமடைந்தார். அதன் பின்பு இடம்பெயர்ந்து தகப்பனுடனும், தங்கையுடனும் முகாம் சென்று பின்பு மீண்டும் கிளிநொச்சியில் வசித்துவந்தனர்.

உயர்தரக் கல்வியினை கற்கும் நோக்குடன் 2011 ஆம் ஆண்டு உடுவில் மகளிர் கல்லூரியில் சங்கீதாவும். சயனிகாவும் சேர்ந்து படிப்பினை கற்றுக்கொண்டிருந்தபோது தலையில் படுகாயமடைந்த தங்கை சயனிகா புற்றுநோய் காரணமாக 2018.01.23 ஆம் நாள் சாவடைந்தார்.

இவ்வளவு இழப்புகளுக்கும் மத்தியில் தனது படிப்பினை தொடர்ந்து கற்று 2018 ஆண்டு உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து விஞ்ஞானப் பிரிவில் 176 புள்ளிகளைப்பெற்று. யாழ்ப்பாண மாவட்டத்தில் 07 ஆவது தரத்தினைப் பெற்று பேராதனை பல்கலைக்கழக மருத்துவத்துறைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சங்கீதா படிப்பில் மட்டுமன்றி நடனம், வலைப்பந்தாட்டம், சங்கீதம் போன்ற துறைகளிலும் சிறந்துவிளங்கினார். தமிழ் நாட்டில் நடைபெற்ற பாட்டுப் போட்டியில் 03 ஆவது இடத்தினைப் பெற்று பரிசில்களும் பாராட்டுக்களும் பெற்றிருந்தார். இவரின் தகப்பன் குறைந்த வருமானத்தில் நோயாளர் பராமரிப்புத் தொழிலை மேற்கொண்டு சங்கீதாவின் படிப்பிற்கு கஷ்ரத்தின் மத்தியிலும் உழைத்து வருகின்றார். சங்கீதா மருத்துவ படிப்பினை சிறந்தமுறையில் நிறைவு செய்து சிறந்த மருத்துவராக நமது நாட்டிற்கு சேவை செய்யவேண்டும் என இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள்**
(cr.36493) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 03 – 01 – 1952

மறைவு 08 – 12 – 2020

**அமரர் கிரிபண்டா நந்தசேனா**

திதி : நவமி 28.11.2021

நெஞ்சமதில் நிறைந்து நின்று
எண்ணமதில் என்றும் நிறைந்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

அல்லாரை வடக்கு, கொடிகாமம் (CR 36478) (3/6)

நினைவுகளுடன் குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1970.07.29 — இறப்பு 2021.11.24

நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
**அருளானந்தம் செல்வகுமார்**

ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய முன்னாள் நிர்வாக அங்கத்தவரும் மகாசபை உறுப்பினரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காமாட்சி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**
**ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய நிர்வாகத்தினர்.**
(CS 704)1-6

# OXFORD COLLEGE

of further and higher education

நாங்கள் உங்களை ஆங்கிலம் பேச வைக்கிறோம்.

இது எங்கள் உத்தரவாதம்

**DIPLOMA IN ENGLISH**

**3 DAYS A WEEK**

திங்கள், புதன் மற்றும் வெள்ளி

இரவு 8.00 மணி முதல்

இரவு 10.00 மணி வரை

தொடக்க நாள் : 6.12.2021

**2 மாதங்கள் MONTHS**

**Hurry Up!**

076 136 988 6

076 136 988 5

Email : infor.oxfordcollege@gmail.com

Web: www.oxfordcollegeedu.com

**SCHOLARSHIP**

~~RS.11,000~~

**Rs. 5000/=** மட்டுமே



வணக்கம் நான் தயாபரன் அருல்செல்வி, ஆங்கிலம் என்பது ஒரு மொழியாகும். அதனை கற்பதற்கு சரி யான வழிகாட்டல்களை பின்பற்றினால் நாமும் ஆங்கிலத்தை சரளமாக பேச முடியும் என்பதை **Oxford College** மூலம் நடாத்தப்பட்ட ஆங்கில வகுப்புகளின் மூலம் அறிந்து கொண்டேன். இருமாத பயிற்சிநெறியில் எளிமையாக புரிந்துகொள்ளும் வகையில் நடாத்தப்பட்டதோடு மேலதிக பயிற்சிகள் மற்றும் ஆங்கில உரையாடல் பயிற்சிகளை வழங்கி யிருந்தமை ஆங்கிலத்தில் மேலும் தெளிவினையும், ஈடுபாட்டினையும் அதிகரித்தது. தொடர்ச்சியான பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் ஆங்கில மொழியறிவை மேலும் விருத்தி செய்யமுடியும் எனவும் அதற்கான அடித்தளத்தை இட்டுத் தந்த **Oxford College** நிறுவனத்திற்கும் எனது ஆசானுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



வணக்கம் நான் செல்வகுமார் நிரோஷ. நான் கண்டியில் வசிக்கின்றேன். நான் **Oxford College** இல் சேர்வதற்கு முன்னால் எனக்கு ஆங்கி லம் பேச தெரியாது. ஆங்கில மொழி என்றாலே ஒருவித பயம். புரிந்து கொள்ளவே கடினம். ஆனால் நான் Oxford இல் சேர்ந்த பிறகு ஆங்கிலம் இவ்வளவு இலகுவாக கற்றுக் கொள்ள முடியுமா? என்று ஆச்சரியப்பட்டேன். ஆங்கில மொழியை குறுகிய காலத் தில் சிறந்த வழிகாட்டலுடன் என்னால் கற்றுக்கொள்ள முடிந்தது. இப்போது நான் ஆங்கில மொழியை இலகுவாக புரிந்து கொள்ள, பயமில்லாமல் விருப்பத்துடன் பேச முடிகிறது. இதற்கு நான் **Oxford** ற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன்.

போலிகளை நம்பி ஏமாறாதீர்கள்

உண்மையான ஆக்ஸ்போர்டு கல்லூரி

**(Oxford College of further and higher education)**

(cr.36453)



# மணிவிழா வாழ்த்து

## திருமதி தேவியாராணி லிங்கேஸ்வரன்

## (B.Com, PGDE)




**சேவை விவரம்:**

- கிளி/ மாசார் அ.த.க. பாடசாலை - 1994.10.31 - 1995.05.20
- கிளி/ பளை றோ.க.த.க. பாடசாலை - 1995.05.21 - 1996.05.22
- மு/ கற்சிலை மடு அ.த.க. பாடசாலை - 1996.05.23 - 2000.12.31
- மு/ வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தி.- 2001.01.01 - 2003.12.31
- யா/ நடேஸ்வராக் கல்லூரி - 2003.01.01 - 2003.12.31
- யா/ இராமநாதன் கல்லூரி - 2004.01.16 - 2014.01.21
- யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி - 2014.01.22 - 2021.11.28




கற்பித்தல் பணியதனை
கரிசனை யோடாற்றிய எம்
தேவியா ராணி எனும்
திறமை மிகு உப அதிபர்
கல்வி, நிதி, நிர்வாகப்
பல்வகைமைச் செயல் புரிந்து
மணிவிழாக் காணுகின்றார்!
மாண்புடனே வாழி என்றும்!

**எமது பாடசாலையில் ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும் உப அதிபராகவும் எட்டு வருடங்கள் அரும்பணியாற்றி இன்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெறும்** மணிவிழா நாயகியை எமது கல்லூரி முன்றலில் வீற்றிருக்கும் முருகப்பெருமானின் அருள்வேண்டி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations!

**வாழ்த்துவோர்:**

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**

**யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி**

(cs.41314) (2.6)

# துயர் பகிர்வோம்

## இராமலிங்கம் லோகநாதன்



பிறப்பு 28.02.1936 இறப்பு 26.11.2021

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, சின்னப்புதுக்குளம் சிவன்கோவில் முன் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த இராமலிங்கம் லோகநாதன் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமை யாளராகவும், கணக்காளராகவும் கிளிநொச்சி கரைச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பொது முகாமையாளராகவும், ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியம், ரெட்பானா ஆகியவற் றின் திட்டமிடல் அதிகாரியாகவும், யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாள் கோவில் ஆதீன மகாசபையின் தலைவராகவும், கௌரவ ஆலோசக ராகவும், வவுனியா கோவில்குளம் சிவன் கோவில் கணக்காளராகவும், நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றினார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் நாகரத்தினம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கந்தையாச் செட்டியார் இராசம்மா தம்பதியினரின் பெறாமகனும், வள்ளிநாயகியின் சகோதரனும், நடராஜாவின் மைத்துனரும், காலஞ்சென்ற வர்களான பத்மநாபன், சீனிவாசகம், வாசுதேவன், கிருஷ்ணமூர்த்தி, சரஸ்வதி மற்றும் சாரதாமணி தேவி,இராஜராஜேஸ்வரி, சீதாலட்சுமி, பாலச்சந்திரா, ஜெகதீஸ்வரி, ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், கமலாவதியின் அன்புக் கணவரும், வாகீசன், காலஞ் சென்ற ஆரணி, மாதங்கி, அம்பரீசன், சாரங்கன் ஆகியோரின் பாசமிகு தந்தை யும், சிரோன்மணி, தயாபரன், தயானந்தன், பானுரேகா, தர்சினி ஆகியோரின் மாமனாரும், சுபாசினி, செந்தூரனின் பெரி யப்பாவும், ஜெயசங்கர், றஞ்சினி ஆகியோரின் மாமனாரும், சயன், ஆரணி, ஆரபி, அர்ஷிதா, மைத்திரி, பிருந்தன், தருணிகா, தர்மிகன், ஆரணன் ஆகி யோரின் பாசமிகு பேரனும், கேதீசன், மாலினி, ஆகியோரின் தாய் மாமனாரும், காலஞ்சென்ற நவரத்தினம், சரோஜினி, செல்வராஜா, காலஞ்சென்ற இந்திராணி, ரகுபதி ஆகியோரின் மைத்துனரும், ஈஸ்வரி, ஜெகதீஸ்வரன், அருந்தவராஜா (மேழிக்குமரன்), சுலோக்சனா, ரதிதேவி ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற வர்களான சிவசுப்ரமணியம், சிவஞான சுந்தரம் ஆகியோரின் பால்யகால நண்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 26.11.2021 வெள்ளிக்கிழமையன்று பிற் பகல் 2.00 மணியளவில் அன்னாரது வவுனியா இல்லத்தில் இடம்பெற்று மாலை 4.00 மணியளவில் வவுனியா வெளிக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றாரர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**077 020 0636, 024 222 0651, 0033 678 520052, 0041 779 51887**

(CR 36492) (3/6)

# மரண அறிவித்தல்

## திருமதி தெய்வானைப்பிள்ளை சண்முகநாதன்



தோற்றம் : 02.05.1933 மறைவு : 26.11.2021

யாழ் கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் 38, பிறவுண் வீதியை வசிப்பிட மாக்வும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை சண்முகநாதன் அவர்கள் கடந்த (26.11.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் - ராஜமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான K.V.சண்முக நாதனின் பாசமிகு மனைவியும், சந்திரப்பிறேமா (ஓய்வுபெற்ற சிரேஷ்ட தாதிய உத்தி யோகத்தர்- யாழ் போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் லோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), தில்லேஸ் வரன் (நல்லூர்), காலஞ் சென்ற விஜயநாதன் (கனடா) மற்றும் நிஷாளினி (வைத்தியர்- அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தன் (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்- யாழ் பிரதேச செயல கம்), காலஞ்சென்ற சிறிராணி மற்றும் சந்திரிகா (அவுஸ்திரேலியா), சுபோதினி (முகாமைத் துவ சேவையாளர் - யாழ் மாநகர சபை), உஷா தேவி (கனடா), சேந்தன் (வைத்தியர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நதீஷ் மற்றும் சிவானுஜா, கஜந், சஜந், ஷம்யா, ஷண்கீரன், விபுசன் காலஞ்சென்ற ஐஸ்வர்யா மற்றும் மஞ்சரி, கிரிதர், சஞ்செயன், ஷியானுகா, விஷ்ணிகா, சரணிகன், லவந்தன், வைகா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், அதீஷ், ஆருஷ், அன்சி, ஜித்தன்யா ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்ற வர்களான துரையப்பா, பாலசுப்பிரமணியம், மற்றும் காமாட்சியம்மா (கனடா), காலஞ்சென்ற ருக்மணிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர் களான இராசரட்ணம் அசலாம்பிகை, மகாலிங்கம், மற்றும் கமலாம் பிகை, ஞானாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணி யளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**ச.தில்லேஸ்வரன் (மகன்)**

**0777 570 203**

(CS 41304)(1/6)

## தேவை

யாழ் நகரில் வெல்டிங் வேலை தெரிந்த ஆண் ஒருவர் தேவை நல்ல சம்பளம் வழங்கப்படும். (CS 41281) (3.6)

தொடர்பு: 076 826 7703

## அறை வசதி

கொழும்பு பிரதேசத்தில் அறை வசதிகள் உண்டு. (வசதி குறைந்த நற்பண்புள்ள யாழ் மாணவருக்கு முதலிடம்)

(CS 674 C)(3.6)

தொடர்பு: 077 070 7089

## வாடகைக்கு உண்டு

நாரகன்பிட்டி இரு படுக்கைஅறைகள் கொண்ட அன்டர்சன்மாடி வீடு. உடனடியாக வாடகைக்குண்டு.

(CS 674 B)(3.6)

தொடர்பு: 077 070 7089

## வீடு வாடகைக்கு தேவை

4 பேர் கொண்ட குடும்பத்திற்கு 3 அறை, இணைந்த குளியலறையுடனான வீடு வாடகைக்கு தேவை. நீராவியடி, பிறவுண்றோட், கொக்குவில் விரும்பத்தக்கது. (CS 690)(3.6)

தொடர்பு: 076 632 4449

## Vacancy - Quantity Surveyor

வடமாகாணம் மற்றும் இலங்கையில் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு 4 வருட அனுபவமுள்ள B.Sc Quantiy Surveyor தேவை.

**குறிப்பு:** கட்டடத்துறையில் முன் அனுபவமும் Pre Tender &Post Tender இலும் அனுபவமும் உள்ளவர்கள் வரவேற்கத்தக்கது.

Contact Number - 021 222 4840
- 077 220 0546 } Office Time Only

Address:
No.469, Kandy Road, Jaffna.
E-mail Id - Adminjaffna@sanken.lk

(cs 41271)(2.6)

## நெல் விற்பனைக்கு

சிகப்பு (406, ஈக்கிள் நெல்) தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். வவுனியா, யாழ்ப்பாண அரிசி ஆலையாளர்களும் தொடர்பு கொள்ளலாம்.

T.P : 077 786 5637 (CS 41300) (3.6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 45 ரூபாய்

077 334 1281

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய அழகிய பொம்மேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

077 869 5005 (cs 41299) (2.6)

## வீடு வாடகைக்குண்டு

யாழ். இந்துக் கல்லூரிக்கருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

077 833 6848 (cs 41317) (2.6)

## பணிப்பெண் தேவை

சுன்னாகத்தில் 4 வயது ஆண் பிள்ளையை பராமரிக்க பணிப்பெண் தேவை. தேவைப்படின் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். (cr.41288)(2.6)

077 240 6755

## மணமகன் தேவை

1986 ஆம் ஆண்டு பிறந்த மேஷ இராசி பரணி நட்சத்திரம் யாழ் இந்து உயர் கல்வி (M.A) கற்று அரச தொழில் புரியும் மணமகளுக்கு அவுஸ்ரேலியா, கனடா, நியூலாந்து, லண்டன், P.R உள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (CS 00928)(3.6)

தொடர்பு: 076 922 0707

## சமையற்கலை

01. 20 - 30 வயதுக்குட்பட்ட பயிற்சி பெற விரும்பும் சமையற் கலையில் ஆர்வமுள்ள இருபாலாரும்.
02. மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருக்கும் Delivery Boys தேவை.

(CS 674 A)(3.6)

தொடர்பு: 077 729 9304

## Chemistry-V.K.நந்தா

நேரடி வகுப்புகள்
2022-சனி,ஞாயிறு (12.30-2PM)
2023-சனி,ஞாயிறு (10.30-12PM)
(ஆரம்ப அலகுகளும் மீட்டல் செய்துவிடப்படும்.
The Science Corner
Clock Tower Lane, Jaffna.

076 545 6118 (CS 41318) 1-6

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்ப 1976 இல் பிறந்த திருமணமாகாத B.Sc பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்கு திருமணமாகாத படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை. (CS 41297) (3.6)

தொடர்பு: 076 667 8996

## வேலையாட்கள் தேவை

**Phoenix Book Shop**
* Typesetter (Computer Type Seting தெரிந்தவர்கள்)
* Cashier
* Photo Copy Operator

**Phoenix உணவகம்**
* உணவு பரிமாறுபவர்
* சமையல் உதவியாளர்
* Cleaner

Salary - 20 000/- அல்லது பேசித்தீர்மானிக்கலாம்

தொடர்பு: 074 045 7588
386, Clock Tower Road, Jaffna.

(CS 41301) (3.6)

## வேலைவாய்ப்பு

யாழில் A தரமுள்ள Hotel இல் பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

1. Room boys
2. Waiters
3. Cook helpers
4. Stewards
5. Accounts Clerk

தொடர்பு:076 419 2934
Email: brightinnjaffna@gmail.com

(CS 696)1-6

## வீட்டு பணிப்பெண் தேவை

உரும்பிராய் முதலாம் ஒழுங்கையில் உள்ள வீட்டிற்கு சமையல் மற்றும், வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
வயது எல்லை 30 – 50 விரும்பத்தக்கது.
சம்பளம் நாள் ஒன்றுக்கு ரூபா 800.00

தொடர்பு: 077 200 4857 (CR 36486 )(3/6)

## நல்லூரில் வீடு வாடகைக்கு

நல்லூரில் வீடு வாடகைக்குண்டு. (cs.41307) (2. 6)

077 797 7924, 071 847 4710

## தேவை

பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு நல்லூர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சங்கானை ஆகிய இடங்களில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. (CS 41316)(3.6)

077 468 2951, 077 408 3656

## வாடகைக்கு

1. யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு எதிரில் கடை வாடகைக்கு உண்டு.
2. யாழ். போதனாவைத்தியசாலைக்கு அருகில் இணைந்த குளியல் அறைகளோடு கூடிய இரு அறைகள் வாடகைக்கு உண்டு.

070 668 7677 (acs.41306) (2.6)

## பணிப்பெண் தேவை

மல்லாவி யோகபுரத்தில் வசிக்கும் வயோதிபப் பெண்மணியை தங்கி நின்று பராமரிப்பதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும். (CS 41298 (3.6)

தொடர்பு: 076 962 1436




அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த நகைகள் அறுதியாக போகின்றனவா?

எந்தவொரு வங்கியில் அடகு வைத்த நகைகளுக்கு

**பவுண் ஒன்றுக்கு ரூபா.23,000/= இற்கு மேல்**

**70 சத அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு **0767 888 222** இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 077 1201856 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 076 9914642 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாழைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |
| கிண்ணியா | 077 1201853 | களுவாஞ்சிகுடி | 077 1201864 |
| மஹியங்கனை | 077 1201862 | உடப்புவ | 077 1201851 |
| கல்பிட்டி | 076 1605803 | வேலணை | 076 9940273 |
| மஸ்கெலியா | 076 0909822 | | |

(ACO 17645)

Easy Way To CANADA

Analyzed, Interviewed and Visa Applications submitted by Lawyers in Canada.

- Education for Kids between 5 & 17 years
- Both Parents are allowed to accompany the Child
- No IELTS or other special qualifications necessary

Copy, paste following link to study Canada Government Website
https://www.canada.ca/en/immigration-refugees-citizenship/services/study-canada/study-permit/prepare/minor-children.html

Skilled & Unskilled Migration to Canada

- Send your Resume for an analysis
- Education above 'A' Levels + 3 years' experience
- Age less than 49 years Males / Females

+94 777 788 732 ☎ +94 112 890 692

Consolidated Academic Lanka (Private) Limited
No.22-B, Station Lane, Nugegoda.
ceo@academiclanka.com / info@academiclanka.com
Web : www.academiclanka.lk

(cr.36489)

## மாவீரர் நினைவில்...

மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு நீதிமன்றங்கள் ஊடாக சிறிலங்காப் பொலிஸார் தடையுத்தரவுகளைப்பெற முயன்றனர். சில நீதிமன்றங்கள் தடை பிறப்பித்தன. பெரும்பாலான நீதிமன்றங்கள் தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை.

இந்த நிலையில் மக்களை உளவியல் ரீதியாக அச்சுறுத்தி நினைவேந்தலை முடக்கும் செயற்பாட்டை சிறிலங்கா பாதுகாப்புத் தரப்பு முன்னெடுத்தது. சிவில் உடையில் புலனாய்வாளர்களைக் களமிறக்கி நினைவேந்த முற்படுபவர்களை ஒளிப்படம் எடுத்தது.

வீதிகளின் இராணுவ போர் வாகனங்களை நிறுத்தியது. நினைவேந்தல் செய்யப்படும் என்று கருதிய இடங்களில் ஆயுதங்களுடன் படையினரை நிறுத்தியது. எந்தெந்த வகைகளில் நினைவேந்தலை நிறுத்த முடியுமோ அத்தனை வழிகளையும் பிரயோகித்தது.

**தீருவில்**

வல்வெட்டித்துறை தீருவில் வெளியில் நேற்று மாலை மாவீரர் நாள் நினைவேந்தல் நடைபெற்றது. தீருவில் பொது வெளிக்கு மக்கள் நுழைய முடியாதவாறு இராணுவத்தினர் தடை ஏற்படுத்தினர். 15 பேரை மாத்திரமே அனுமதிக்க முடியும் என்று தெரிவித்தனர். இதனால் மக்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது. அத்துடன் தீப்பந்தங்களையும் அங்கிருந்து இராணுவத்தினர் பறித்துச் சென்றனர். தீருவில் பொது வெளிக்குள் அனுமதிக்கப்படாத மக்கள் வெளியில் நின்று சுட்டிகளில் தீபமேற்றி அஞ்சலித்தனர். அவற்றையும் பாதுகாப்புத் தரப்பினர் காலால் தட்டி வீழ்த்தி மிதித்தனர்.

**சாட்டி**

வேலணை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள சாட்டித் துயிலும் இல்லத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஸ் தலைமையிலான குழுவினர் அஞ்சலிக்குச் சென்றனர். அங்கும் இராணுவத்தினர், அஞ்சலிக்க வந்தவர்களை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினர். இராணுவத்தினரின் தடைகளைத் தாண்டி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதேபோன்று பருத்தித்துறை முனைப் பகுதியிலும் இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைக் கடற்கரையில் பெரும் நெருக்குவாரத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் மத்தியில் ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலிக்கப்பட்டது. மாங்குளம் வன்னிவிளாங்குளத்தில் சுமார் நூற்றுக் கணக்கானோருடன் மாவீரர் நாள் நினைவேந்தல் இடம்பெற்றது.

(ஒ-26,125,246,110,213)

## மாவீரர் நாள்...

மன்னார், நவ. 28

மாவீரர் நினைவேந்தல் தொடர்பான ஒளிப்படத்தை முகநூலில் பதிவிட்ட சந்தேகத்தில் மன்னாரில் இளைஞர் ஒருவரும், முல்லைத்தீவுக் கடற்கரையில் நேற்று மாலை மாவீரர் நாளை நினைவுகூர முற்பட்டதாக இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான பீற்றர் இளஞ்செழியனே முல்லைத்தீவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-56)

## யாழ். பல்கலைக்கழகத்தில்..

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். பல்கலைக்கழகத்தில் கெடுபிடிகளை மீறி நேற்று மாலை 6.07 மணிக்கு ஈகச்சுடரேற்றி உயிரிழந்த வீர மறவர்களுக்கு முழந்தா ளிட்டு மாணவர்களால் அஞ்சலி



யும் செலுத்தப்பட்டது. பல்கலைக்கழக சூழலில் இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்டு வழமையைவிட கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகமாக இருந்த நிலையில் மாணவர்கள் தமது ஆத்மார்த்தமான கடமையை நிறைவேற்றியுள்ளனர்.

பல் கலைக்கழக வேலை நாளாக இருந்தாலும் பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழக கதவுகளை நேற்றுப் பூட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-26)



## 'பீல்ட்...

யாழ்ப்பாணம், நவ. 28

தடைகளைத் தகர்த்தெறிந்து தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் நேற்று உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், மக்களை உளவியல் ரீதியாக அச்சுறுத்தும் வகையில் படையினரின் 'பீல்ட் பைக்குறூப்' நேற்று வலம் வந்தது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இவர்களின் பிரசன்னம் அதிகமாகவே இருந்தது. அத்துடன் வீதிகளின் குறுக்கே இராணுவ கவச வாகனங்களை நிறுத்தியும் அச்சுறுத்த முயன்ற பாதுகாப்புத் தரப்பினர் அனைத்திலும் தோல்வியையே சந்தித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



தாக்கியதாகக் கூறப்படும் சிப்பாய்



தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட முள்ளுக்கம்பி சுற்றிய பச்சை மட்டையை எடுத்துச் செல்லும் பொலிஸார்

## முள்ளிவாய்க்காலில்...

வத்தினரால் முள்ளுக்கம்பி சுற்றப்பட்ட பச்சை மட்டையால் கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளரை முல்லைத்தீவு பொலிஸார் தமது வாகனத்தில் ஏற்றி, முல்லைத்தீவு உண்ணாப்புலவு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

தாக்குதல் தொடர்பில் விஸ்வச்சந்திரன் தெரிவித்ததாவது, என்னால் தற்போது கதைக்கமுடியாதுள்ளது. இரணுவத்தினர் என்னை கடுமையாகத் தாக்கியதில் குருதி அதிகளவில் வெளியேறிவிட்டது. அதனால் எனக்கு தற்போது தலைசுற்றுகின்றது.

இராணுவத்தினர் எனக்கு தலையில் சரமாரியாகத் தாக்கினர். நான் தலையிலே தலைக்கவசம் அணிந்திருந்ததால் அதுபெரிய அளவில் தாக்கத்தைக் கொடுக்கவில்லை. பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் பெயர் பலகையின் காணொலி எனது செய்தி அறிக்கைக்குத் தேவையாக இருந்தது. அதனை பதிவுசெய்தேன்.

அப்போது அந்த பகுதியில் இராணுவ சீருடையில் ஒருவர் 20மீற்றர் தூரத்தில் நின்றிருந்தார். அவர் என்னை பார்த்து வீடியோ எடுக்கவேண்டாம் என்று கூறினார். இருப்பினும் நான் பதிவுசெய்வதை நிறுத்தவில்லை. எனது அருகே வந்த அவர் தாக்கினார். தாக்கும்போது 'என்னைத் தாக்காதீர்கள், என்னவென்று பேசுவோம், என்ன தேவை என்று சொல்லுங்கள்' என்று கூறினேன்.

ஆனால் அவர் எனது பேச்சைக் கேட்கவில்லை. மாறாக அவர் எனது ஒளிப்படக் கருவியைப் பறித்தெடுப்பதிலே கவனம் செலுத்தினார். அப்போது நான் ஒரு ஊடகவியலாளர் என்பதை அவரிடம் வெளிப்படுத்தினேன். அவர் தொடர்ந்து தாக்கினார். மேலதிகமாக அங்கு நான்கு இராணுவத்தினரை அவர் வரவழைத்து என்னை பச்சைமட்டையால் தாக்கினார்கள். தொடர்ந்து தலைக்கவசத்தாலும் தாக்கினார்கள். அத்தோடு நின்று விடாமல் முள்ளுக்கம்பிக் குள்ளும் தள்ளி என்னைத் தாக்கினார்கள். அரைமணிநேரமாக என்னிடம் இருந்த ஆதாரங்களை பறிப்பதற்கு முயற்சிசெய்தார்கள். நான் ஆதாரங்களை வழங்கவில்லை. அவ்வாறு ஆதாரங்களை வழங்காததால் மேலும் என்னைத் தாக்கினார்கள். இறுதியாக எதுமே செய்ய முடியாத நிலையில், என்னால் இயலாத நிலையில் அந்த ஆவணங்களை அவர்கள் என்னிடமிருந்து பறித்தெடுத்தார்கள்.

அப்போது அந்தவீதியால் சென்றவர்களிடம் 'இதற்கொரு நீதிவேண்டும் யாராவது பேசுங்கள்' என்று கூறினேன். வீதியால் சென்றவர்களில் சிலர் அங்கு நின்றார்கள். இராணுவத்தினர் அவர்களையும் அச்சுறுத்தி அவ்வாறு நின்றவர் களை அங்கிருந்து செல்லுமாறு துரத்தினார்கள். இரணுவத்தினரின் அச்சுறுத்தல் காரணமாக அங்கு நின்றவர்களும் புறப்பட்டனர்.

அப்படியிருந்தபோது முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த ஒருவர்தான், பொலிஸாருக்கோ, ஊடகவியலாளருக்கோ தெரியப்படுத்தினார். இரண்டு தொலைபேசிகள் மற்றும், பேர்ஸ் என்பவற்றை இராணுவத்தினர் என்னிடமிருந்து பறித்தெடுத்துவிட்டார்கள், -என்றார். (ஒ-246)

## உதயனுக்குள்...

இராணுவத்தினர், ஆசிரியர்பீடப் பகுதிக்குள் நுழைய முயன்றபோது தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்புப்பட்டனர். மாவீரர் நாளான நேற்று மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் முதல் உதயன் பத்திரிகை அலுவலகம் முன்பாக ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் மூவர் நிறுத்தப்பட்டிருந்தனர். உதயன் பத்திரிகையை கண்காணிக்கும் வகையில் அவர்களின் பிரசன்னம் அமைந்திருந்தது. இந்த நிலையில் நேற்று மாலை ஆயுதம் தாங்கிய சிப்பாய் ஒருவர் அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து, ஆசிரியர்பீடப் பகுதிக்குள் செல்ல முற்பட்டார். உதயனின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அவரைத் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினார். இதனையடுத்து அவர் வெளியேறினார். (ஒ-10)

## மாவீரரை...

நேற்று பயங்கரவாதிகளை நினைவேந்திய அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கூண்டோடு கைதுசெய்யப்படுவார்கள். இவ்வாறு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் ஆகியோரின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மாவீரர் நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. துயிலும் இல்லங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மாவீரர்கள் நினைவாக மக்கள் ஈகைச்சுடரேற்றினார்கள். இந்தநிலையிலேயே அரசு மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழர்கள் கூறும் 'மாவீரர்கள்' பயங்கரவாதிகள். அவர்கள் இந்த நாட்டை அழித்தவர்கள்; பலரைக் கொலைசெய்தவர்கள்.

இந்த நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவர்களை நினைவுகூரவே முடியாது. பயங்கரவாதிகளை நினைவேந்த எமது அரசும் ஒருபோதும் அனுமதி வழங்கவில்லை. எனவே, வடக்கு-கிழக்கில் நேற்று பயங்கரவாதிகளை நினைவேந்திய அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கூண்டோடு கைதுசெய்யப்படுவார்கள். அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும், என்றார். (ஒ-22)

## கதறியழுத...

கள் கதறியழுதனர். பாதுகாப்புத் தரப்பினரின் கெடுபிடிகள், அவர்களது கண்காணிப்புக்களையும் தாண்டி தங்கள் உள்ளக்குமுறலைக் கொட்டித் தீர்த்து அழுதனர். காண்போர் நெஞ்சைக் கரைய வைக்கும் வகையில் அவை அமைந்திருந்தன. (ஒ-26)

## சிங்கக் கொடியுடன் வந்தோர் விரட்டியடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கையின் தேசியக் கொடியான வாளேந்திய சிங்கக் கொடியுடன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட வந்தவர்கள் யாழ்ப்பாண நகரில் நேற்று விரட்டியடிக்கப்பட்டனர். அவர்கள் கொரோனா விதிமுறைகளை மீறி அங்கு பிரசன்னமாகியிருந்த நிலையில் பொலிஸார் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். (ஒ-20)

# பனை முறிந்ததில் மின்சாரம் துண்டிப்பு

யாழ்ப்பாணம், நவ.28

தொடர்ந்து வீசிய காற்றால், காணி ஒன்றிலிருந்த பனைமரம் முறிந்து வீழ்ந்தது. அதனால் அந்தப் பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் அராலி மத்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து இலங்கை மின்சார சபையின் வட்டுக்கோட்டை அலுவலகத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த மின்சார சபையினர் மின்னிணைப்பைச் சரி செய்தனர்.

(ஒ-4-27)


## கொழும்பு, இந்து வித்யாவிருத்திச் சங்கத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தும்

## பேச்சுப்போட்டி, விவாதப்போட்டி –2022

**ஒவ்வொரு பிரிவுக்குமான பரிசில்கள்**

- முதலாம் பரிசு : ரூபா 25,000
- இரண்டாம் பரிசு : ரூபா 15,000
- மூன்றாம் பரிசு : ரூபா 10,000

பணப்பரிசுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும். அத்துடன் மேலும் 07 போட்டியாளர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். பங்குபற்றுவோர் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**பொது நிபந்தனைகள்:**

- போட்டி 03 பிரிவுகளாக நடாத்தப்படும்.
- முதலாம் பிரிவு தரம் 05 தொடக்கம் தரம் 07 வரையிலான மாணவர்கள்
- இரண்டாம் பிரிவு தரம் 08 தொடக்கம் தரம் 10 வரையிலான மாணவர்கள்
- மூன்றாம் பிரிவு தரம் 11 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்கள்

- விவாதப்போட்டி திறந்த போட்டியாக நடாத்தப்படும்.
- போட்டிகள் யாவும் இணைய வழியூடாக நடாத்தப்படும்.
- விண்ணப்பங்கள் யாவும் 25.12.2021ற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**அஞ்சல் மூலமாக எனின்,**
தலைவர்,
இந்து வித்தியாவிருத்திச் சங்கம்
சரஸ்வதி மண்டபம்
75, லோரன்ஸ் வீதி,
கொழும்பு 04.

**மின்னஞ்சல் மூலமாக எனின்,**
thambymuthu21@gmail.com

- பேச்சுப்போட்டி, விவாதப்போட்டிக்கான தலைப்புகளை பாடசாலை அதிபர்கள் அல்லது போட்டியாளர்கள் மேற்காட்டிய முகவரிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
- போட்டிகளுக்கான தலைப்புகள் யாவும் சைவ சமயம் தொடர்பானதாகவே இருக்கும்.
- போட்டிகள் விரைவில் நடாத்தப்படும்.
- நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
- பாடசாலை அதிபர்களினது மேலான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:
011 2585 975 / 077 1418 864

(cr.36479)

- வே.கந்தசாமி
தலைவர்



# Interested in a JOB in Europe, Canada or Australia?

**Complete one of following programs in a Russian State University**
**Thereafter we will guarantee a job in a country stated above**

- General Medicine / Pediatrics / Dentistry
- Pharmacy / Nursing / Preventive / Social / Medicine / Public Health
- Aerospace / Aeronautical Engineering / Rocket Engineering / Avionics
- Electrical Engineering / Electronics Engineering / Mechanical Engineering
- Civil Engineering / Architecture
- Computer Engineering / Computer sciences / Computer systems & Networks
- International Economics / Business Administration / Management
- Veterinary Medicine / Agronomy / Agriculture Engineering

Very low course fees and accommodation fees
Full Scholarships for genuine students
Spouse and Children allowed to accompany
No fixed Deposits / No IELTS / Part time jobs

**Requirements**
GCE (Ordinary) Level with a Russian Preparatory Department program OR GCE (Advanced) Level

**Consolidated Academic Lanka (Private) Limited**
No.22-B, Station Lane,
Nugegoda.
Web : www.academiclanka.lk

Tel : +94 112 890 692 Mobile : +94 777 788 732

Email : ceo@academiclanka.com / info@academiclanka.com



## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

076 702 3565

(CS 41305) 1-6

## காணி விற்பனைக்கு

நூல் நிலையம் மற்றும் பிரபல பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள 125/1, 2ஆம் குறுக்குத் தெருவில் 3/4 பரப்பில் அமைந்துள்ள வீடும் காணியும், விற்பனைக்கு உண்டு.

(CS 41262) (3/6) தொடர்பு: 077 776 8606

## நோயாளர் நலன்புரிச் சங்கம்
## ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி
## துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்திற்கான கேள்விகள் கோரல்

மேற்படி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தினை 01.01.2022 முதல் 31.12.2022 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

ஆர்வமுள்ளவர்கள் எமது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வழங்கப்படும் படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி **"தலைவர் நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி"** எனும் முகவரிக்கு 15.12.2021 ந் திகதிக்கு முதல் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 15000/- (மாதாந்தம்)

**மேலதிக விபரங்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அறிந்து கொள்ளவும்**

செயலாளர் (CR 36485) (3/6) தலைவர்



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## தோகா கட்டார்

கட்டார் நாட்டில் உள்ள பிரபல்யமான கம்பனி ஒன்றிற்கு கீழ்கண்ட வேலைகளுக்கு வேலையாட்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.

| வகை | அளவு | சம்பளம் (QR) | சம்பளம் (SR) |
|---|---|---|---|
| கிளினர்ஸ் | 46 | 1000 | 56000.00 |
| சிறிய ரக சாரதி | 05 | 1200 | 67200.00 |
| கன ரக சாரதி | 05 | 1500 | 84000.00 |
| வாகனம் A/C டெக்னீஷியன் | 01 | 1600 | 89600.00 |
| வாகனம் இலக்ட்ரீஷியன் | 02 | 2000 | 112000.00 |
| வாகன மெக்கேனிக் | 01 | 2000 | 112000.00 |
| ஐட்ரோலிக் மெக்கேனிக் | 01 | 3500 | 196000.00 |
| மெக்கேனிக் உதவியாளர் | 04 | 1500 | 84000.00 |
| டயர் மேன் | 01 | 1500 | 84000.00 |
| வெல்டர் | 01 | 1700 | 95200.00 |

ஒப்பந்தம்: 300QR உணவிற்கு வழங்கப்படும். கட்டணம் 97416/- to 140,000/-

## துபாய்

| வகை | அளவு | சம்பளம் (DHS) | சம்பளம் (SR) |
|---|---|---|---|
| கிளினர்ஸ் (ஆண்) | 82 | 900 | 49500 |
| கிளினர்ஸ் (பெண்) | 99 | 900 | 49500 |
| சுப்பர்மார்க்கட் உதவியாளர் | 100 | 900 | 49500 |
| சிறியரக வாகன சாரதி | 100 | 1800 | 99000 |
| தொழிற்சாலை உதவியாளர் | 50 | 900 | 49500 |
| வெல்டர் | 50 | 1300-1600 | 71500-88000 |
| கம்பி கட்டுவோர் | 50 | 1100 | 60500 |
| காபெண்டர் | 50 | 1100 | 60500 |
| ஜிப்சம் காபெண்டர் | 50 | 1100-1300 | 60500-71500 |
| A/C டெக்னீஷியன் | 25 | 1800 | 99000 |
| இலக்ட்ரீஷியன் | 25 | 1300 | 71500 |
| மெஷினிஸ்ட் | 25 | 1800 | 99000 |
| வெயிடர் | 15 | 1000 | 55000 |
| குக் (சமயற்காா்) | 10 | 1300-1800 | 71500-99000 |
| செப் (Chef) | 10 | 1300-1800 | 71500-99000 |
| கிச்சன் உதவியாளர் | 10 | 1000 | 55000 |
| கனரக வாகன இயந்திர ஒபரேட்டர் (JCB, Dozer, Excalvator ) | 10 | 2300-3300 | 126500-181500 |
| மல்டி டெக்னீஷியன் | 25 | 1650 | 90750 |
| Swimming Pool Technician | 25 | 1650 | 90750 |

ஒப்பந்தம்: உணவிற்கு 200 வழங்கப்படும். கட்டணம் 114,970/-

## அபுதாபி

| வகை | அளவு | சம்பளம் (AED) | சம்பளம் (SR) |
|---|---|---|---|
| POOL LIFE GUARDS (MALE) | 50 | 1950 | 107250 |
| POOL LIFE GUARDS (FEMALE) | 25 | 2050 | 112750 |
| BEACH LIFE GUARDS (MALE) | 50 | 2250 | 123750 |
| BEACH LIFE GUARDS (FEMALE) | 25 | 2250 | 123750 |

ஒப்பந்தம்: உணவிற்கு 200 AED சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

## சவுதி அரேபியா

| வகை | சம்பளம் (SR) | சம்பளம் (SR) |
|---|---|---|
| Plumber | 1200 | 63600 |
| HVAC Technician | 1800 | 95400 |
| Auto sliding Door Technician | 3800 | 201400 |
| Fire Safety Technician | 1800 | 95400 |
| Multi Technician | 1800 | 95400 |
| A/C Technician | 1600 | 84800 |
| Cleaner (Male) | 1100 | 58300 |
| Cleaner (Female) | 1000 | 53000 |

ஒப்பந்தம்: உணவிற்கு 200 SR சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

## குவைட்

| வகை | அளவு | சம்பளம் (KWD) | சம்பளம் (SR) |
|---|---|---|---|
| Nurse (Male) | 50 | 305 | 201910 |
| Nurse (Female) | 100 | 305 | 201910 |

ஒப்பந்தம்: உணவிற்கு 25 KWD வழங்கப்படும்.

ஒப்பந்தம்: தங்குமிடம், மருத்துவம் இலவசம். வேலை நேரம் நாளொன்றிற்கு 08 மணித்தியாலயங்கள் வாரத்திற்கு 48 மணித்தியாலயங்கள். 02 வருட ஒப்பந்த முடிவில் விமான டிக்கட் இலவசம். AL/Advt/0701/14,07/13/08/10/11/2021

**பாஸ்போர்ட் உடன் எமது காரியத்திற்கு உடனடியாக வரவும்...**

## தனா மேன் பவர்

இல.104, செட்டியார் தெரு, 2ம் மாடி, கொழும்பு 11.
TP. 0115 33 33 46/7/8/9
Mobile No. 072 2728015, 072 2282548, 076 4154894
E-Mail: danamanpower@yahoo.com Web: www.danamanpower.com






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.